வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 75 பக்கங்கள் : 16




## எரிபொருள் விலைகள் உச்சத்தை தொட்டன!

- பெற்றோல் 81 ரூபாவால்
- டீசல் 79 ரூபாவால்
- மண்ணெண்ணெய் 60 ரூபாவால்

கொழும்பு, மார்ச் 22

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரி பொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித் துள்ளது.

இதன்படி ஒட்டோ டீசல் 79 ரூபாயால் அதிகரிக்கப் பட்டு 382 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், லங்கா சுப்பர் டீசல் 90 ரூபாயால் அதிக ரிக்கப்பட்டு 443 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள் ளது.

அதேநேரம், ஒக்ரேன் 92 ரக பெற்றோல், 81 ரூபா யால் அதிகரிக்கப்பட்டு 398 ரூபாயாக விற்பனை செய் யப்படவுள்ளது.

எனினும், ஒக்ரேன் 95 ரக பெற்றோல் 90 ரூபா யால் அதிகரிக்கப்பட்டு 455 ரூபாயாக விற்பனை 15

## காணாமல்போன யாழ். விரிவுரையாளரின் உருக்குலைந்த உடலம் தனங்கிளப்பில் மீட்பு!

### கொலைச் சந்தேகத்தின் பேரில் மகள், மருமகன் தடுப்புக் காவலில்






யாழ்ப்பாணம், மார்ச் 22

கடந்த நான்கு நாட்களுக்கு முன் காணாமல் போனதாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தின் விரிவுரையாளரின் உடலம் சாவகச்சேரி - தனங்கிளப்பு, அறுகுவெளிப் பகுதியில் இருந்து நேற்றுக்காலை உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட் டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தின் சமூகநல மருத்துவத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரு மான சித்த மருத்துவ கலாநிதி தயாளினி திலீபன் என்பவரின் உடலமே நேற்றுக் காலை யாழ்ப் பாணம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

உடலமாக மீட்கப்பட்ட விரிவுரையா ளருக்கும், அவரது மகள், மகளது கணவர் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட குடும்பத் தகறாரே கொலையில் முடிந்திருப்பதா கப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது -

அரியாலை - புங்கன்குளத்தை அண்மித்த பகுதி யில் தனது மகளுடன் வசித்து வந்த விரிவுரை யாளரு க்கும் மகள் மற்றும் மகளின் கணவர் 15



## பதவிக்காலம் முடிவதற்கு முன்பே ட்ரம்ப் பதவி இழப்பதற்கு வாய்ப்பு!

### இணைய கருத்துக் கணிப்புகளிலிருந்து தகவல்

நியூயோர்க், மார்ச் 22

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது இரண் டாவது பதவிக்காலம் முடிவதற்கு முன் மீண்டும் பதவி நீக்கத் திற்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக ஒன்லைன் கணிப்பு தளங்கள் தெரிவிக்கின்றன.

கல்ஷி என்ற கணிப்பு தளத்தின் படி, ட்ரம்ப் மீண்டும் பதவி நீக்கப்பட வாய்ப்பு தற்போது 69 வீதமாக உயர்ந்துள்ளது. இது 2024 நவம்பரில் இந்த கணிப்பு தொடங்கியதிலிருந்து 15

## தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி தகவல்களை யாரும் மறைக்கமுடியாது

### கடற்படையின் மேன்முறையீட்டை நிராகரித்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்

கொழும்பு, மார்ச் 22

தகவல் அறியும் உரி மைச் சட்டத்தின் கீழ் கோரப்படும் தகவல் களை, "தேசிய பாதுகா ப்பு" என்ற போர்வையில் தன்னிச்சையாக மறுக்க முடியாது என மேன் முறையீட்டு நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றை வழங்கி யுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தின் போது, முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ 15

## அரசுக்குள் புதிய மாபியாக்கள்!

### ஜனாபதிக்கு மனோ எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 22

எரிவாயு, எரிபொருள் மற்றும் மருந்து கொள்வனவுக ளில் நிலவும் ஏகபோகக் கூட்டணிகளை முறியடிப்பதாக ஜனாதிபதி கூறினாலும், அரசாங்கத்திற்குள் புதிய மாபி யாக்கள் உருவாகி வருவதாக தமிழ் முற்போக்குக் கூட்ட ணியின் தலைவர் மனோ கணேசன் எச்சரித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்க ளின் கூட்டத்தின்போது, ஏகபோகங்களை உடைப்ப தற்கான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வின் முயற்சிகளைப் பாராட்டிய அதேவேளை, 15

## கியூ.ஆர். எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 22

கியூ.ஆர். குறியீட்டு முறையின் கீழ் வழங்கப்பட்டு வரும் வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள் ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறி வித்துள்ளது.

மத்திய கிழக்கு மோதல்கள் மற்றும் சர்வதேச எரி சக்தி நெருக்கடிக்கு மத்தியிலும், உள்நாட்டுத் தேவைகளைக் கருத்திற்கொண்டு இந்த எரி பொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. 15

## ஓட்டோ-டிப்பர் மோதியதில் தாயும் மகளும் உயிரிழப்பு!

### சரசாலைப் பகுதியில் துயரம்!!



யாழ்ப்பாணம், மார்ச் 22

சாவகச்சேரி சரசாலை கனகம்புளியடி பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள் ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் 15

## தனியார் பஸ் சேவைகள் 50வீதம் குறையும் அபாயம்

கொழும்பு, மார்ச் 22

இலங்கை முழுவதும் தனியார் பேருந்துகளுக்கான எரிபொருள் விநியோகத்தில் நிலவும் சீரற்ற தன்மை காரணமாக, பொது போக்குவரத்து சேவை கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக இலங்கை தனி யார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் 15

## எரிபொருள் நெருக்கடி; சுகாதாரக் கட்டமைப்பு முடங்கும் அபாயநிலை

கொழும்பு, மார்ச் 22

எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைக ளுக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வுகளை வழங்கா விட்டால், நாட்டின் மருத்துவமனைக் கட்டமைப்பு அடுத்த ஒரு வாரத்திற்குள் முடங்கும் அல்லது பாரிய வீழ்ச்சியைச் சந்திக்கும் என வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்கள் 15

## 9 மாகாணங்களிலும் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் காரியாலயங்கள்!

கொழும்பு, மார்ச் 22

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் புதிய கிளைக் காரியாலயங்களை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய பாராளுமன்றக் குழுவின் கூட் டத்தில் கலந்து கொண்டபோதே, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க இதனை தெரிவித்துள் ளார். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தோணி

## திரைப் பார்வை:

### போருக்குப் பிறகான கண்ணீரும் புன்னகையும்!

- ஆர்.சி.ஜெயந்தன்

(தமிழகப் பத்திரிகையின் பார்வையில் ஈழத்து தயாரிப்பான அத்தோனி திரைப்படம்!)

முள்ளிவாய்க்கால் போருக்குப் பிறகான ஈழத்தமிழ்ச் சினிமாக்கள் பலவும் அங்கே வாழும் விளிம்புநிலைத் தமிழர்கள் தறிகெட்டுத் திரிகிறார்கள், குற்றம் செய்கிறார்கள் என்றெல்லாம் "சிங்கள லாபி"யுடன் பேசிக்கொண்டிருந்தன.

அந்த பிம்பத்தை உடைத்து, போருக்குப் பிந்தைய அமைதிச் சூழலில் மனிதர்களின் அகப் போராட்டத்தைப் பேச வந்திருக்கிறது "அந்தோனி". இலங்கை மண்ணின் தற்போதைய யதார்த்தத்தையும், அங்கு வாழும் எளிய மக்களின் "மீட்டுருவாக்க"க் கனவுகளையும் ஒரு கவிதையைப் போலப் பதிவு செய்திருக்கிறார்கள் இயக்குநர்கள் சுகிர்தன் கிறிஸ்துராஜா மற்றும் ஜெனோசன் ராஜேஷ்வர் இருவரும்.

ஈரானியப் படங்களில் அதிகாரத்தை நேரடியாக எதிர்க்க முடியாதபோது, குழந்தைகளின் உலகம் மற்றும் குடும்ப உறவுகள் வழியாகப் பெரிய அரசியலைப் பேசுவார்கள். அந்த "மறைமுகத் திரைமொழி" இப்படத்திலும் இழையோடுகிறது. 2009-க்குப் பிந்தைய ஈழத்தில், தமிழ் மீனவர்கள் எதிர்கொள்ளும் நிச்சயமற்ற நிலையை, எவ்வித அரசியல் முழக்கமுமின்றி முதன்மைக் கதாபாத்திரமான அந்தோனியின் தனிமை வழியாகவே படம் கடத்திவிடுகிறது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், ஆண்டுதோறும் உழைத்துச் சேர்த்துவைத்துவிட்டு, தாயகம் திரும்பி, சேமிப்பைச் செலவழித்து ஒருநாள் கொண்டாடும் அந்த "புதுப்பித்தல்" உணர்வு, ஒரு காட்சியில் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "அங்கே இருக்கிற மிச்சக் காலத்தைத் தாங்கிப் பிடிப்பது இந்த ஒரு நாள் மகிழ்ச்சிதான்" என்கிற வசனம், லட்சக்கணக்கான புலம்பெயர் தமிழர்களின் ஆன்மாவைத் தொடும் ஓர் உணர்வுத் தருணம். இதைப் போல நிதர்சனங்களை மறைமுகமாகப் பேசும் இப்படத்தின் கதையோ நம் மனதில் சுனாமியாகிவிடுகிறது.

கடலைத் தாயாக நேசிக்கும் அந்தோனி (கயல் வின்சன்ட்), கச்சதீவு அருகே விபத்துக்குள்ளாகும் ஒரு தமிழ்நாட்டுப் படகிலிருந்து தண்ணீரில் விழுந்து மயக்கமுற்று மிதக்கும் இளம் பெண்ணான நளினியை ("வாழ்"படப் புகழ் டி.ஜே. பானு) மீட்டு காப்பாற்றி ஈழம் அழைத்துச் சென்று தான் வாழும் பகுதியின் பங்கு தேவாலயத்தில் பாதுகாப்பாக ஒப்படைக்கிறான். நளினியின் வாழ்க்கையில் அவளது உறவுகளைக் கடலம்மா எடுத்துக்கொண்டாள் என்றால், உறவுகளற்ற அந்தோணிக்கு நளினி என்கிற உறவைக் கொடுக்கிறாள்.

அந்தோனியும் நளினியையும் காலம் இணைக்கும்போது, அவர்களின் வாழ்வில் பாலைவனச் சோலைபோல் பூக்கிறாள் நிலா (ஆஷனா). நிலாவின் பிறப்பு அர்த்தமுள்ள குடும்பமாக அந்தோனி - நளினியின் வாழ்க்கையை ஒளிவீசச் செய்கிறது. ஆனால், அந்தோனி - நளினி - கடல் இந்த மூவருக்கும் இடையிலான இந்தக் கொடுக்கல் வாங்கலின் அடுத்தகட்டம் என்னவாக இருந்தது என்பதே கதை.

கயல் வின்சென்ட் ஒரு திறமையான மீனவனாகவும், பாசமிகு தந்தையாகவும் இருவேறு தோற்றங்களில் மிளிர்கிறார். எதிர்பாராமல் கிடைத்த உறவுகளால் மகிழ்ந்திருக்கும்போது காட்டும் நிறைவையும் வாழ்வு எதிர்பாராத வலியைக் கொடுக்கும்போது வெளியே காட்டாமல் உள்ளுக்குள் புழுங்கும் மன வெடிப்பையும் தன் இயல்பான நடிப்பில் அழுத்தமாகப் பிரதிபலிப்பதில் சிறந்த கலைஞன் என்பதைக் காட்டிவிடுகிறார்.

மெலிந்த தோற்றமும் அந்த "மோனாலிசா" புன்னகையும் என அதிக வசனங்கள் இல்லா மல், தன் பாவனை நடிப்பால் அசத்துகிறார் தமிழ்நாட்டின் நளினியாகப் பிறந்து ஈழத்தின் தொப்புள்கொடி உறவாக மாறி விடும் டி.ஜே. பானு. "தனியாவே இருந்துடுவே னோன்னு தான் பயமா இருக்கு" என்கிற வசனம் வழியாகப் போருக்குப் பிந்தைய ஒரு தமிழ்ப் பெண்ணின் பாதுகாப்பின்மையை நளினி வழியாக உணர்த்திவிடுகிறார்கள் இயக்குநர்கள்.

பங்கு தேவாலய பாதிரியாராக வரும் நிழல்கள் ரவி, அருள்தாஸ் போன்ற பரிச்சயமான தமிழ் சினிமாவின் முகங்கள் படத்துக்குள் நம்மை ஈர்க்கின்றனர். அதேநேரம், ஈழத்துக் கலைஞர்களின் உலகத்தரமான நடிப்பும் அசல் ஈழத்துத் தமிழ் உச்சரிப்பும், படத்துக்குத் தமிழ்ப் பண்பாட்டின் பன்மைத்துவத் தன்மையைக் கொடுத்துவிடுகிறது. குறிப்பாக அந்தோணி, வாடகை வல்லம் எடுத்துச் செல்ல அனுமதிக்கும் அவனுடைய நண்பர், தொடங்கி பொடிசுகள் வரை அனைவரும் ஈர்க்கிறார்கள். மற்றொரு காதல் இணையாக வரும் சுதர்சனும் ஷாமியும் அவ்வளவு இயல்பாக மனதில் ஒட்டிக்கொள்கிறார்கள்.

"விடுதலை" படத்துக்குப் பிறகு இசைஞானி இளையராஜா வழங்கியிருக்கும் ஓர் இசைப் பொக்கிஷம் இந்தப் படம். "குத்து விளக்கொளியே", "மொட்டு விட்ட புது மலரே" போன்ற பாடல்கள் உறவுகளின் உன்னதத்தைப் பேசுகின்றன. வசனங்கள் மௌனமாகும் இடங்களிலும் காட்சி மொழியில் விரியும் நிலப்பரப்பு கடல்பரப்பு இரண்டிலும் இழையோடும் உணர்வுகளின் ஏற்ற இறக்கங்களை இளையராஜாவின் இசை ஆழ்ந்து பேசுகிறது. அந்தோனியின் தனிமை, அவனது எதிர்பாராமை, கடலின் பிரம்மாண்டம் என அனைத்தையும் தன் இசையால் ஒரு புதிய உயரத்திற்குக் கொண்டு சென்றுவிடுகிறார் ராஜா.

ஒளிப்பதிவாளர் ரிஷி செல்வம், இலங்கை நிலப்பரப்பின் அழகையும் கடலின் ஆழத்தையும் ஒரு தாயின் அக்கறையோடு படமாக்கியிருக்கிறார். யாழ்ப்பாண நூலகம் முதல் எளிய தெருக்கள் வரை ஈழத்தின் அசல் நிறத்தைத் திரையில் பார்க்கும்போது, ஒருமுறை அந்த மண்ணிற்குச் சென்று வரத் தூண்டுகிறது. குறையைத் தேடிப் பிடிக்க வேண்டிய கட்டாயத்துக்கு நம்மைத் தள்ளியிருக்கிறார்கள் இயக்குநர்கள்.

"அந்தோனி" - ஒரு பெரும் போருக்குப் பின் எஞ்சியிருக்கும் மனிதர்களின் ஏக்கத்தைப் பேசும் தரமான படைப்பு. வன்முறையும் இரத்தமும் ஓடிய நிலத்தில் அன்பையும் அரவணைப்பையும் ஏக்கத்தையும் முன்வைக்கும் இந்தப் படம், புத்தாயிரத்தின் ஈழ வெகுஜன சினிமாவுக்கு ஓர் அணிகலன். அதை ஆழக்கடல் முத்து என்றும் சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பாதாள உலக குழுவினரின் சகாக்கள் 15 பேர் ஆயுதங்களுடன் கைது

கொழும்பு, மார்ச். 22

வெளிநாடுகளில் தலைமறைவாக இருக்கும் இரு முக்கிய பாதாள உலகக் குற்றவாளிகளின் ஆலோசனையின் பேரில் நாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த 15 பேர் விசேட அதிரடிப் படையினரின் சோதனையின்போது கைது செய்யப்பட்டனர்.

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனையின் பேரில், கல்கிஸ்ஸை குற்ற விசாரணைப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் நேற்று சனிக்கிழமை அதிகாலை 03.00 மணி முதல் காலை 08.00 மணி வரை இந்த விசேட சோதனையை முன்னெடுத்தனர்.

இரத்மலானை விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் உள்ள அரலிய வீடமைப்புத் தொகுதியிலேயே இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது, கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 5 கூர்மையான ஆயுதங்கள், சுமார் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான 40 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

வெளிநாட்டில் இருந்து கொண்டு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் 'எல்லாவல தர்மசிறி பெரேரா' (அல்டோ தர்மே) மற்றும் 'சந்தோ' (கவிந்து தனஞ்சய) ஆகியோரின் கீழ் இயங்கும் தாக்குதல் குழுவைச் சேர்ந்த 11 பேரும், ஏனைய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூவரும் மற்றும் பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (எ)

# யாழில் திடல் தொழுகை



யாழ்ப்பாணம், மார்ச். 22

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் பிரதான திடல் தொழுகை யாழ் மர்யம் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் மௌலவி எம்.ஏ.பைசர் தலைமையில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் நேற்றுக் காலை 06.30 மணியளவில் நடைபெற்றது.

பெருநாள் திடல் தொழுகையில் யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் என சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். (எ-03)

# பொலிஸ் சுற்றிவளைப்பு மேலும் 506 பேர் கைது!

கொழும்பு, மார்ச். 22

நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 506 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 27, 699 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 14 பேர் குற்றங்களுடன் தொடர்புடையவர்களாகவும் நேரடி சந்தேக நபர்களாகவும் அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 253 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 142 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 201 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 38 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,447 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# "உள்நாட்டு பொறிமுறை தொடர்பில் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை"

கொழும்பு, மார்ச். 22

உள்நாட்டு பொறிமுறை தொடர்பில் நீங்கள் தொடர்ந்தும் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. 2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளதாக கூறப்படும் நிலையில் அரசாங்கமோ அந்த எண்ணிக்கை 2,764 என்று கணக்கு கூறுவது வேடிக்கையாக உள்ளது என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நீதி மற்றும் ஒருமைப்பாடு அமைச்சரிடம் நிலையியல் கட்டளையின் கீழ் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே சாணக்கியன் எம்.பி. இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு பணிகள் விடயத்தில் அங்கு கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களை ஏன் சர்வதேச ரீதியலான ஆய்வுகளுக்கு உட்படுத்தவில்லை. 96, 97 காலத்தில் மீட்கப்பட்டவை ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆய்வு நிறுவனமொன்றில் உள்ளன.

டி.என்.ஏ. பரிசோதனைகளுக்கு உட்படுத்தலாம். பாதிக்கப்பட்ட மக்கள் நிராகரிக்கும் உள்நாட்டு பொறிமுறை தொடர்பில் நீங்கள் தொடர்ந்தும் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகம், நிதி ஒதுக்கீடு பற்றி கூறுகின்ற போதும், கொல்லப்பட்ட மற்றும் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஒரு வார்த்தையும் உங்களின் பதிலில் இல்லை.- என்றார். (எ)

# வெளிநாட்டு பிரதிநிதிகளின் திடீர் விஜயங்களின் பின்னணி என்ன?

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி கேள்வி

கொழும்பு, மார்ச். 22

இலங்கைக்கு சடுதியாக வருகைதரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு என்பது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. மாறாக நாம் இப்போது உலக வல்லரசுகளின் போட்டி எனும் ஈர்ப்பு விசைக்குள் இழுக்கப்பட்டு வருகிறோம். இது நாம் குழப்பத்தை அன்றி, தெளிவை வெளிக்காட்டவேண்டிய தருணமாகும் என முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி சுட்டிக் காட்டியுள்ளார்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் மோதல்கள் தீவிரமடைந்திருக்கும் பின்னணியில், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க விசேட பிரதிநிதி செர்ஜியோ கோர் நாட்டுக்கு வருகை தந்திருக்கிறார்.

இந்த நிலையில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் திடீர் விஜயங்கள் குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் முன்னாள் அமைச்சர் அலி சப்ரி செய்திருக்கும் பதிவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை புவிசார் அரசியல் போட்டிகளுக்கான ஒரு களம் அல்ல. இதனை எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி தெளிவாகக் கூறவேண்டும். எமது நாடு, எமது துறைமுகங்கள் மற்றும் எமது கடற்பரப்பில் எந்தவொரு போர்வையிலும் வெளிநாட்டு இராணுவத்தின் அல்லது உளவுத்துறையின் கூறுகள் இருக்கக் கூடாது.

நாட்டின் இறையாண்மை என்பது பேச்சுவார்த்தைக்கு உட்பட்டதோ, நீர்த்துப்போகச் செய்யக்கூடியதோ அல்லது கட்டம் கட்டமாக சமரசம் செய்து கொள்ளப்படக் கூடியதோ அல்ல.

எமது பிரத்யேக பொருளாதார மண்டலம், கடல் வழித்தடங்கள் உள்ளடங்கலாகத் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது பொறுப்பாகும். அவற்றை 'ஒத்துழைப்பு' எனும் பெயரில் முன்வைக்கப்படும் நீண்டகால மூலோபாய விளைவுகளைக் கொண்ட உடன்படிக்கைகள் மூலம் விட்டுக்கொடுக்கமுடியாது. நாம் சகல நாடுகளுடனும் இணைந்து செயலாற்றுவோம். ஆனால், எவருடனும் அணிசேர மாட்டோம்.

இந்து சமுத்திரப்பிராந்தியத்தை ஒரு 'அமைதி நிலவும் மண்டலமாகப்' பேணுவதற்கு இலங்கை தொடர்ந்து முனைப்புடன் குரலெழுப்பி வருகிறது. இது வெறும் சொல்லாடல் அல்ல. மாறாக இது நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு தீர்மானத்தையும் வழிநடத்தும் ஒரு கொள்கையாகும்.

இது பிற நாடுகளின் விவகாரங்களில் சிக்குண்டு தத்தளிப்பதற்கான நேரம் அல்ல. மாறாக இது நாம் உறுதியாக நிற்பதற்கும், எமது இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும், துணிச்சலுடன் செயலாற்றுவதற்குமான நேரமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# எரிபொருளை பதுக்கிய மேலும் மூவர் சிக்கினர்!

கொழும்பு, மார்ச். 22

சட்டவிரோதமான முறையில் எரிபொருளை வைத்திருந்தமை, விற்பனை செய்தமை மற்றும் கடத்தியமை தொடர்பில் மூன்று வெவ்வேறு சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை ஹங்வெல்ல, களுத்துறை வடக்கு மற்றும் கொட்டாஞ்சேனை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எமுல்கம பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, அனுமதிப்பத்திரமின்றி 645 லீற்றர் டீசலை வைத்திருந்த 31 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவின் போசிரிபுர பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில், அனுமதிப்பத்திரமின்றி 35 லீற்றர் 500 மில்லி லீற்றர் பெற்றோலை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் 32 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவின் புளூமெண்டல் பகுதியில் லொறி ஒன்றின் மூலம் அனுமதிப்பத்திரமின்றி 2000 லீற்றர் (10 பீப்பாய்கள்) டீசலை கடத்திச் சென்ற 25 வயது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். (எ)

# இலங்கை - ஜப்பான் பாதுகாப்பு உறவுகள் மேலும் வலுப்பெற்றன

டோக்கியோ, மார்ச். 22

இலங்கை - ஜப்பான் பாதுகாப்பு உறவுகள் மேலும் வலுப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர மற்றும் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இடையே டோக்கியோவில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் உயர்மட்ட சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் முக்கிய அம்சமாக இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துதல் அமைந்தது. இதன்போது குறிப்பாக கடல்சார் பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ திறன் மேம்பாடு மற்றும் இந்து -பசுபிக் பிராந்தியத்தின் நிலைத்தன்மை ஆகியவை கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. (எ)

# மதத்தலைவர்களுக்கு அரசால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டதா?

கொழும்பு, மார்ச். 22

ஜனாதிபதியின் விசேட ஏற்பாடுகளின் கீழ், அல்லது அமைச்சரவையின் அனுமதியுடன், அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சின் ஏற்பாட்டின் அடிப்படையில் பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத் தலைவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் விசேட சலுகைகளுடன் இலங்கை அரசின் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதா? என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலன்னாவ முனையத்திலிருந்து எரிபொருள் விநியோகம் இல்லை

## ஏமாற்றத்துடன் திரும்பிய பவுசர்கள்!



கொழும்பு, மார்ச். 22

நேற்றும் இன்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நேற்றுக்காலை கொலன்னாவ முனையத்திலிருந்து பவுசர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

பதிவு செய்யப்பட்ட எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நேற்றுக் காலை கொலன்னாவ முனையத்துக்கு வருகை தந்த எரிபொருள் பவுசர்கள், எரிபொருள் கிடைக்காத காரணத்தால் மீண்டும் திரும்பிச் சென்றன.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் இடம்பெறும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்றுக்காலை கொலன்னாவ முனையத்துக்கு வந்த பவுசர்கள் எரிபொருள் இன்றித் திரும்பிச் சென்றன. (எ)

# அனுமதியின்றி பெற்றோல் வைத்திருந்த இருவர் கைது

நீர்கொழும்பு, மார்ச். 22

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 50 ஏக்கர் மற்றும் தளுபொத்த பகுதிகளில், உரிய அனுமதிப்பத்திரமின்றி பெற்றோல் வைத்திருந்த சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை மாலை, நீர்கொழும்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த 18 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ)

# பல மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, மார்ச். 22

மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவக்கூடும் என்று அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக ஏற்படக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ)

# மண்வெட்டியால் தாக்கி முதியவர் உயிரிழப்பு!

களுத்துறை, மார்ச். 22

ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொரலுகொட பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற தாக்குதலில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

விடுதி ஒன்றில் தங்கியிருந்த நபருக்கும், முதியவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த வாய்த்தர்க்கத்தின் போது, சந்தேகநபர் மண்வெட்டியால் தாக்கியதில் பலத்த காயமடைந்த முதியவர் உயிரிழந்தார். (எ)

### வெளிநாட்டு தயாரிப்பு

# துப்பாக்கிகளுடன் இருவர் சிக்கினர்!

களுத்துறை, மார்ச். 22

களுத்துறை - பயாகல, மெட்டியமுல்ல பகுதியில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போது, வெளிநாட்டு தயாரிப்பு ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் இரண்டுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து, வெளிநாட்டு தயாரிப்பு ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் - 02, அவற்றுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் - 10, கைவிலங்கு மற்றும் அதன் சாவி - 01 என்பன கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் ஒருவரும், அவருக்கு உதவியாக இருந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 55 மற்றும் 61 வயதுடையவர்கள் எனவும் பயாகல மற்றும் கலகெடிஹேன பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ)

# கடலில் அடித்துச்செல்லப்பட்ட இந்திய சுற்றுலாப்பயணி மீட்பு

காலி, மார்ச். 22

ஹிக்கடுவை துறைமுகத்துக்கு அருகிலுள்ள கடலில் நீராடச் சென்று, கடல் அலையில் அடித்துச்செல்லப்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர், பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை மதியம் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

இதன்போது, கடற்கரையில் கடமையில் ஈடுபட்டிருந்த ஹிக்கடுவை பொலிஸ் உயிர் காப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் மற்றும் கடற்கரை பாதுகாப்புப் படை அதிகாரிகளும் இணைந்து குறித்த நபரை மீட்டனர்.

மீட்கப்பட்டவர் 46 வயது இந்தியப் பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

# திங்கட்கிழமை முதல் விசேட சோதனைகள்

கொழும்பு, மார்ச். 22

பண்டிகை காலத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் உள்ள வர்த்தக நிலையங்களை சோதனையிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக 2,000இற்கும் மேற்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று அந்த சங்கத்தின் செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்தார்.

# “கம்பன் புகழ் பாடும் கதிரவன்” கம்பன் விழா புதுக்குடியிருப்பில்

மட்டக்களப்பு, மார்ச். 22

இந்திய போபால் கம்பன் கழகமும், கதிரவன் கலைக் கழகமும் இணைந்து நடத்தும் “கம்பன் புகழ் பாடும் கதிரவன்” எனும் தலைப்பிலான கம்பன் விழா மட்டக்களப்பு- புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

போபால் கம்பன் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், காலை மற்றும் மாலை என இரண்டு அமர்வுகள் நடைபெறவுள்ளன.

காலை அமர்வு “அயோத்தி அரங்கு” எனப் பெயரிடப்பட்டு, காலை 09. 00 மணி முதல் நண்பகல் 12. 30 மணி வரை நடைபெறவுள்ளது. தொடர்ந்து, மாலை அமர்வு “இராவணேஸ்வரர் அரங்கு” எனப் பெயரிடப்பட்டு, பிற்பகல் 02. 30 மணி முதல் 05.30 மணி வரை நடைபெறவுள்ளது. (எ-09)

# ஜனாதிபதி செயலக வாகனங்கள் 200இற்கும் மேல் குறைக்கப்பட்டன

## சபையில் பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கொழும்பு, மார்ச். 22

கடந்த அரசாங்க காலத்தில் ஜனாதிபதி செயலகத்தின் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 200இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தற்போது குறைக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சமிந்த விஜேசிறி எம். பி. தமது கேள்வியின் போது, நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் ஜனாதிபதி செயலகத்தில் காணப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை?

அத்துடன் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலையடுத்து மேற்படி வாகனங்களில் ஜனாதிபதி செயலகத்துக்கு மீள ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை?- என்றார்.

இதற்கு பிரதமர் பதிலளிக்கையில்,

ஜனாதிபதி செயலகத்தில் 833 வாகனங்கள் உபயோகத்தில் இருந்ததுடன் எமது அரசாங்கம் அவற்றில் 200இற்கும் மேற்பட்ட வாகனங்களை குறைத்துள்ளது. இந்த நிலையில் தற்போது 634 வாகனங்களே உபயோகப்படுத்தப்படுகின்றன. அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின்படி இவ்வாறு வாகனங்கள் குறைக்கப்பட்டன.

ஜனாதிபதி செயலகம் உட்பட அனைத்து அமைச்சுக்களினதும் வாகனங்களை குறைப்பதாகவே நாம் பொது மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தோம். அதனை செயற்படுத்தியுள்ளோம் - என்றார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.03.2026 ஞாயிற்றுக்கிழமை

விசுவாவசு வருடம், பங்குனி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

# போர்ப் பங்காளிகளுக்கு இடையில் தோன்றும் முரண்பாடுகள்

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஈரானுக்கு எதிராகப் போரைத் தொடங்கியபோது அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் முதல் இலக்கு ஒன்றாகவே இருந்தது. ஆனால், ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது என்ற அந்த இலக்கை இதுவரையில் சாதிக்க இயலாமல் போன நிலையில், போரைத்

தொடருவதற்கான தங்கள் தரப்பு நோக்கங்களைப் பொறுத்தவரை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன.

“காவியக் கோபம்” (Epic Fury) என்ற பெயரில் இரு நாடுகளும் ஈரானுக்கு எதிராகத் தொடுத்த போர் தற்போது உலகளாவிய ரீதியில் ட்ரம்புக்கும் நெத்தன்யாகுவுக்கும் எதிரான சீற்றமாக மாறியிருக்கிறது.

மிதமான பொருளாதாரப் பாதிப்புடன் ஈரானுக்கு எதிராக விரைவான இராணுவ வெற்றியைப் பெற்றுவிட முடியும் என்று நம்பிய ட்ரம்ப் “மீசையில் மண்படாமல்” எவ்வாறு போர் நெருக்கடியில் இருந்து விடுபடுவது என்று யோசிக்கிறார் என்பது உண்மை. அதேவேளை, அமெரிக்காவுடன் சேர்ந்து ஈரானைத் துவம்சம் செய்வதற்கு கிடைத்த வாய்ப்பை இறுதிவரை தனக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்துவதில் நெதான்யாகு குறியாக இருக்கிறார் என்பதும் உண்மை.

ஈரானிடமிருந்து அமெரிக்காவுக்கு உடனடி ஆபத்து இருந்ததில்லை என்றும் இஸ்ரேலிடமிருந்தும் அதற்கு ஆதரவான செல்வாக்குமிக்க அமெரிக்க யூதக் குழுக்களிடமிருந்தும் வந்த நெருக்குதலின் விளைவாகவே அமெரிக்கா இன்னொரு மத்திய கிழக்குப் போருக்குள் இழுத்து விடப்பட்டிருக்கிறது என்றும் கூறி அமெரிக்க தேசிய பயங்கரவாத எதிர்ப்பு நிலையத்தின் பணிப்பாளர் ஜோ கென்ற் பதவி விலகியதையடுத்து போருக்கு எதிரான உணர்வுகள் அமெரிக்கர்கள் மத்தியில் கடுமையாக அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது.

இதற்கிடையில், ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாமல்போன விரக்தியில் நெதான்யாகு ஈரானின் எண்ணெய் வளங்களை அழிப்பதில் தீவிரம் காட்டத் தொடங்கியிருக்கிறார்.

உலகிலேயே மிகவும் பெரிய இயற்கை வாயுப் படிவு என்று கூறப்படுகின்ற ஈரானின் சவுத் பார்ஸ் வாயு வயல் மீது இஸ்ரேல் கடந்த புதன்கிழமை இஸ்ரேலியப் போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களை ட்ரம்ப் கடுமையாகக் கண்டனம் செய்திருக்கிறார்.


அந்த இயற்கைவாயு வயலை ஈரான் வளைகுடாவில் மிகப்பெரிய அமெரிக்க இராணுவத் தளத்தைக் கொண்டிருக்கும் கட்டார் நாட்டுடன் பகிர்ந்து கொள்கிறது. ஏற்கெனவே ஈரானின் சரமாரியான ஏவுகணைத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் வளைகுடா அரபு நாடுகள் மத்தியில் தனக்கு எதிரான உணர்வுகள் அதிகரிப்பதற்கு இந்த தாக்குதல்கள் வழிவகுக்கும் என்று ட்ரம்ப் விசனமடைந்திருக்கிறார் போன்று தெரிகிறது.

அமெரிக்காவின் வழிகாட்டலில் தான் இஸ்ரேல் ஈரானுக்கு எதிரான போரில் ஈடுபட்டிருக்கின்றது என்றில்லாமல் இஸ்ரேலின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே அமெரிக்கா போரில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறது என்ற ஒரு தோற்றப்பாடு வந்துவிட்டது.

ஈரானின் இராணுவ மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்களை நிர்மூலம் செய்வதுடன் ஆயிரக் கணக்கில் அந்த நாட்டு மக்களை அமெரிக்காவும் இஸ்ரேலும் கொன்றொழிக்கின்ற போதிலும் ஈரானிய அரசாங்கம் எவரும் எதிர்பாராத வகையில் உறுதிப்பாட்டுடன் எதிர்த்து நின்று பதிலடி கொடுக்கிறது.

ஆரம்பக்கட்ட இலக்கை அடையமுடியாத நிலையில், போரைத் தொடரும் போது வெவ்வேறு நோக்கங்களைக் கொண்ட போர்ப் பங்காளிகள் மத்தியில் மேலும் முரண்பாடுகள் வளருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இறுதியில் அதுவே போரை முடிவுக்குக் கொண்வர இருவரையும் தவிர்க்க முடியாமல் நிர்ப்பந்திக்கலாம்.

# வரலாற்றுச் சிறப்புமிக்க மானிப்பாய் மருதடியானுக்கு இன்று கொடியேற்றம்



ஈழத்தில் விநாயகரின் ஆலயங்களில் முதன்மைத் தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களிலொன்றாகப் போற்றப்படும் இத்தலம் பற்றிய பல்வேறு ஐதீக வரலாறுகள் கூறப்படுகின்றது. அருட்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி விநாயகர் ஆலயம் தனியாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு சென்ற நூற்றாண்டில் பொதுக் கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு பொதுமக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

காலம் தவறாத பூசை வழிபாட்டு ஒழுங்கு திருப்பணி வேலைகள் அறநெறிப்பாடசாலை ஆலய நிர்வாகம் என மிகவும் சிறப்பாக ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மருதடி விநாயகர் ஆலயத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் புதுவருடப்பிறப்பு தினமான எதிர்வரும் ஏப்ரல் 14 ஆம் திகதி இரதோற்சவமும் மறுதினம் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

***மின்னும் மருதடி வாழ் வேழமுகன் றாள் பணிந்து***
***பன்னுவவன் காதை பகர்ந்திடவே - மன்னுபுகழ்***
***நீட்டு மலைமேல் றிகழ்பா ரதம்வரைந்த***
***கோட்டுமுகன் பாதங் குறி***

என்று போற்றுகின்ற மருதடி விநாயகரின் அற்புதத்தினை காண பல்லாயிரக்கனக்கான அடியவர்கள் மகோற்சவ காலத்தில் எம்பெருமானின் சந்நிதானத்திற்க்கு அலைஅலையாக திரண்டு வருவார்கள்.

ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் புடைசூழ விநாயகப் பெருமானின் இரதோற்சவத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும்.

மகிமை மிக்க மருதடியான் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர்மக்களும் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கி தினமும் வருவர்.

இவ்வாலயத்தில் மூன்றுகாலப் பூசைகள் காலந் தவறாது நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் அமாவாசையை அடுத்து வரும் சதுர்த்தி திதியில் விநாயகப்பெருமானுக்கு விஷேட பூசைகள் நடைபெறும் ஆவணி சதுர்த்தி தினமானது பெருமானது சந்நிதானத்தை பார்ப்பவர் கண்களை பூரிக்கச் செய்கின்றது.

இச்சதுர்த்தி “தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர் யாவரும் வந்திவனேவல் செய்திடும் நாள்” ஆக போற்றப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில் விநாயக விரதம் ஆரம்பமாகி இருபத்தொரு நாட்களாய் பிள்ளையார் கதை வாசிக்கப்பட்டு கடைசிநாளிலே கஜமுக சங்காரம் நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்று.

மருதமரத்துப் பிள்ளையார் வருசத்திலே பங்குனி மாதத்தில் உற்சவம் ஆரம்பமாகி தமிழ்ச் சித்திரைப்புத்தாண்டு தினத்தன்று இரதோற்சவமாகக் கொண்டு ஆரம்பகாலத்தில் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை பதினெட்டு நாட்கள் உற்சவமும் 2004 உற்சவத்தையடுத்து புனரமைக்கப்பட்டு கருங்கற் கோவிலாக மீண்டும் 2014 ஆம் ஆண்டில் புதுபொலிவு பெற்று 48 நாள்கள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று அதனையடுத்து 25 நாட்களாக உற்சவ நாட்கள் மாற்றம் செய்யப்பட்டு 25 நாட்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், அள்ளு காசும் தென்னம்பிள்ளையும் வழங்கல், பிள்ளை விற்று வாங்கல், மடிப்பிச்சை எடுத்தல், பட்டுச் சார்த்தல், தேவாரம் ஓதுதல், வடம்பிடித்தல் முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இக்காலத்தில் புராண படனம் செய்தல் சமயப் பிரசங்கம் செய்தல் திருமுறைகள் ஒதுதல் ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்காக நடத்தப்படுகின்றன. மருதமரத்தடியில் வீற்றிருந்தருளும் விநாயகப்பெருமான் வேண்டும் அடியவர்க்கு வேண்டும் வரங்களினை வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

***பூவாழி மன்னர்மநு நீதி வாழி***
***புகலரிய மடமகளீர் நிறையும் வாழி***
***ஆவாழி அந்தணர்தங் கூட்டம் வாழி***
***அருமறைவே தாகமங்கள் புராணம் வாழி***
***ஓவாத தவங்கருணை விரதம் வாழி***
***உலகிலுள்ள சாரசரங்க ளனைத்தும் வாழி***
***மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும்***
***மருதடியிற் கணபதிதாள் வாழிவாழி.***

என்று மகோற்சவ காலத்தில் விநாயகப்பெருமானை மெய்யுருகி வழிபாடாற்றி சைவர்களாக சைவ வாழ்வு வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்களினை நாம் பெற்றுய்வோமாக.

**பண்டிதர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்**
செயலாளர்,
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாதலை எதிர்கொள்ளும் தமிழ்ச் சமூகம்!

மதிவதனி


அறிவியல் வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பப் புரட்சி, உலகளாவிய வர்த்தக உறவுகள் மற்றும் மக்கள் இடம்பெயர்வு ஆகியவை உலகத்தை ஒரே சமூகமாக இணைத்து வருகின்றன. உலகமயமாதல் என்பது வெறும் பொருளாதார மாற்றமல்ல, அது சமூக, பண்பாட்டு, அரசியல் மற்றும் மனித உறவுகளின் அமைப்பையே மாற்றும் சக்தியாகவும் விளங்குகிறது.

இந்த மாற்றத்தின் மத்தியில் பல மொழிகளும் பண்பாடுகளும் தங்களது அடையாளத்தைப் பாதுகாத்துக் கொண்டு புதிய சூழல்களுக்கு ஏற்ப மாற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்ச் சமூகமும் இந்த மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. அதேநேரத்தில், தமிழ்ச் சமூகத்தின் அடையாளத்தை மறுபரிசீலனை செய்யும் நிலையை உருவாக்கியுள்ளன.

தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் பரந்து வாழும் உலகளாவிய சமூகமாக மாறியுள்ளனர். முன்பு ஒரு நாட்டின் வாழ்க்கை முறை, கலாசாரம் மற்றும் பொருளாதார அமைப்பு பெரும்பாலும் அந்த நாட்டின் எல்லைக்குள் மட்டுமே நிலைத்திருந்தது. ஆனால், இன்று தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, இணையம், விமானப் போக்குவரத்து, உலகளாவிய வர்த்தகம் போன்ற காரணங்களால் நாடுகளுக்கு இடையிலான எல்லைகள் மங்கி விட்டன.

ஒரு நாட்டில் உருவாகும் தொழில்நுட்பம் சில நிமிஷங்களில் உலகம் முழுவதும் பரவுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார மாற்றம் மற்ற நாடுகளையும் பாதிக்கிறது. அதேபோல், ஒரு நாட்டின் பண்பாட்டு வெளிப்பாடுகள் மற்ற சமூகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

உலகமயமாதல் பல்வேறு பண்பாடுகளை ஒன்றோடொன்று இணைக்கிறது. மறுபுறம் அந்த பண்பாடுகளின் தனித்துவ அடையாளத்தை சவாலுக்கு உட்படுத்துகிறது. இதனால், பல சமூகங்கள் தங்களுடைய பாரம்பரியத்தைப் பாதுகாத்தபடியே புதிய உலகச் சூழலுக்கு ஏற்ப மாற வேண் டிய கட்டாயத்தில் உள்ளன.



தமிழ்ச் சமூகத்தின் வரலாறு மிகப் பழைமையானது. சங்க கால இலக்கியங்கள் தமிழர்களின் சமூக அமைப்பு, பண் பாட்டு வாழ்வு, அரசியல் மற்றும் பொருளாதார நிலை குறித்த பல தகவல்களை வழங்குகின்றன. மொழி, இலக்கியம், கலை, மதம், சமூக மரபுகள் ஆகியவற் றின் ஒருங்கிணைப்பாக தமிழர் பண்பாடு உருவாகியுள்ளது.

தமிழர்கள் கடல்சார் வணிகத்தில் ஈடுபட்ட சமூகமாகவும் வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றனர். பண்டைய காலங்களில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் தமிழர்களுக்கு வணிக மற்றும் பண்பாட்டுத் தொடர்புகள் இருந்தன. ஆனால், தற்போது காணப்படுவது போன்ற உலகளாவிய பரவல் அப்போது இருந்ததாகக் கூற முடியாது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் தான் தமிழர்களின் புலம்பெயர்வு அதிகரித்தது. குறிப்பாக, காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்களாக பலர் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரீஷியஸ் போன்ற நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு காரணங்களால் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு நாடுகளுக்கு தமிழர்கள் குடியேறத் தொடங்கினர். இவ்வாறு பல்வேறு காலங்களில் நடைபெற்ற புலம்பெயர்வு தமிழ்ச் சமூகத்தை உலகளாவிய சமூகமாக மாற்றியது.

புலம்பெயர்வு என்பது வெறும் இடமாற்றம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையையும் அடையாளத்தையும் மாற்றும் முக்கியமான செயல்முறையாகும். ஒரு புதிய நாட்டில் குடியேறும் போது அந்தச் சமூகத்தினர் அந்நாட்டு மொழி, கலாசாரம், சட்டம் மற்றும் சமூக அமைப்புகளுடன் இணைந்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதனால், ஓர் இரட்டை அடையாளம் உருவாகிறது. ஒருபுறம் அவர்கள் தங்களது பாரம்பரிய அடையாளத்தைப் பாதுகாக்க விரும்புகிறார்கள் மறுபுறம் அவர்கள் வாழும் நாட்டின் சமூகத்துடன் இணைந்து வாழ வேண்டிய தேவையும் உள்ளது.

இந்த நிலையில், புலம்பெயர் தமிழர்கள் பல புதிய சமூக அமைப்புகளை உருவாக்கியுள்ளனர். தமிழ்ப் பள்ளிகள், கலாசார அமைப்புகள், இலக்கிய மன்றங்கள், கோயில்கள் மற்றும் சமூக மையங்கள் போன்றவை புலம்பெயர் வாழ்வில் தமிழர் பண்பாட்டைப் பாதுகாக்கும் முக்கியமான தலங்களாக மாறியுள்ளன.

இவற்றின்மூலம் தமிழ் மொழி கற்பித்தல், பாரம்பரிய கலைகள், திருவிழாக்கள் மற்றும் சமூக நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதன்மூலம் புலம்பெயர் தமிழர்கள் தங்களுடைய பண்பாட்டு அடையாளத்தை புதிய தலைமுறைக்குப் பரப்ப முயற்சி செய்கின்றனர்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சியால் இணையம், சமூக ஊடகங்கள், எண்ம ஊடகங்கள் போன்றவை உலகம் முழுவதும் உள்ள மக்களை ஒரே தளத்தில் இணைக்கும் சக்தியாக மாறியுள்ளன. இணையத்தின் மூலம் தமிழ் இலக்கியம், செய்தி, கல்வி, கலாசாரம் போன்றவை உலகம் முழுவதும் பரவுகின்றன.

உலகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்ட கல்வி, வேலைவாய்ப்பு, நகரமயமாதல் மற்றும் உலகளாவிய தொடர்புகள் ஆகியவை மனிதர்களின் சிந்தனை முறையையும், வாழ்க்கை அணுகுமுறையையும் மாற்றுகின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 22.03.2026 - 28.03.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 08

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அற்புதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சிரமமாக இருக்கும், சில இடங்களில் உழைப்பு போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்ல முறையில் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் மேம்பட்டு பொருள் வரவு உண்டாகும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். மன மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அற்புதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சங்கடமான நிலை உண்டாகும் , சில இடங்களில் பொறாமையுடன் உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். பதவி மாற்றம் கிடைக்கலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்லபடியாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி செல்வாக்கு அதிகரிக்கும். புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளால் நல்ல மன நிம்மதி கிடைக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சிரமம் இருக்கும் , சில இடங்களில் போராட்டம் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் வெற்றியாகும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து வங்கி இருப்பு உயரும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த மன கஷ்டம் நீங்கி சந்தோசம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மன நிம்மதி மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சிரமம் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாறுதல் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை மேம்படும். புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு பிரச்சனை உண்டாகும். சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட் டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாறுதல் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் பண இருப்பு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போட்டி இருக்கும். சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வருமானம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் திட்டமிட்டு இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் விலகும், பிள்ளைகளால் குதூகலம் உண்டாகும். அலுவலகத்தில் உங்களின் செல்வாக்கு உயரும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடுமையாக இருக்கும் , சில இடங்களில் பாதிப்பு இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்ல விதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சிறப்பாக இருக்கும். வார கடைசியில் பொருளாதாரம் உயரும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரித்து மகிழ்ச்சி உண்டாகும், மன அமைதி அதிகரிக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக ஏற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு கஷ்டம் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய அதிகரிப்பு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் வார மத்தியில் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் இருக்கும். சில இடங்களில் நன்மைகள் இருக்கும், சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சில பிரச்சனைகள் வரலாம், ஆனால் காத்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சிறப்பாக இருக்கும், கடுமையான முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் நீங்கும், பிள்ளைகளால் சில சிக்கல்கள் முடிவுக்கு வரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும். சில இடங்களில் வேலையில் பொறாமை இருக்கும். உத்தியோக ரீதியாக உங்கள் திறமைக்கேற்ற உயர்வு உண்டாகும். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி பொருள் வரவு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிக்கல்கள் உண்டாகும் , சில இடங்களில் போராட்டமாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக புதிய மாறுதல்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து செல்வாக்கு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சிரமம் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாறுதல் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை மேம்படும், புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கி நிம்மதி அதிகரிக்கும், பிள்ளைகளால் சீரும் சிறப்பும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்முதலாக இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்துக்கு அடித்தளத்தை அமைத்துக் கொடுத்த ஜி. பார்த்தசாரதி



வீரகத்தி
தனபாலசிங்கம்

(கடந்த வாரத் தொடர்ச்சி )

1931 - 1947 காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த டொனமூர் அரசியலமைப்பு ஐக்கியப்பட்ட தேசிய அடையாளம் ஒன்றை உருவாக்கும் குறிக்கோளுடன் கொண்டுவரப்பட்டதாக கூறப்பட்ட போதிலும், அது உண்மையில் இலங்கையில் இனவாத அரசியலை தீவிரப்படுத்தியதன் மூலமாக எதிர்மறையான ஒரு திருப்புமுனையாக மாறியது.

இனரீதியான பிரதிநிதித்துவத்தை ஒழித்து சர்வஜன வாக்குரிமையுடன் பிராந்தியப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியதன் மூலமாக அந்த அரசியலமைப்பு சிங்களப் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு அரசியல் அதிகாரத்தை நகர்த்தியது. இதன் விளைவாக சிறுபான்மைச் சமூகங்கள் பாகுபாட்டுக்குள்ளாகின.

பெரிய அரசியல் அபிலாசைகளைக் கொண்டிருந்த பண்டாரநாயக்கவும் முற்போக்கு தேசிய கட்சியை கைவிட்டு சிங்கள மகாசபையை ஆரம்பித்தார். சமஷ்டி முறைக்காக குரல் கொடுப்பதை நிறுத்திய அவர் அதற்கு பதிலாக பன்முகப்படுத்தலை ஆதரிக்கத் தொடங்கினார். உள்ளூராட்சி முறையை மேம்படுத்தி பன்முகப்படுத்தலின் மூலமாக பெருமளவில் சுயாட்சியை வழங்குவதை பண்டாரநாயக்க ஆதரித்தார்.

பெரிய உள்ளூராட்சி அதிகார அலகாக மாகாணங்களை நோக்கத்தொடங்கிய பண்டாரநாயக்க, மாகாண சபைகளை அமைக்க விரும்பினார். இரண்டாவது அரசாங்க சபையில் உளளூராட்சி அமைச்சராக அவர் பதிவகித்தபோது அந்த அமைச்சின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராக இருந்த ஆர்.எஸ். எஸ். குணவர்தன மாகாண சபைகளை அமைப்பதற்காக கொண்டுவந்த பிரேரணையை அரசாங்க சபை அங்கீகரித்தது.

ஆனால், விளங்கிக்கொள்ள முடியாத காரணங்களுக்காக பண்ட ரநாயக்க மாகாணசபைகளை அமைக்கும் திட்டத்தை முன்னெடுக்கவில்லை என்று ஜெயராஜ் எழுதியிருக்கிறார்.

பிறகு தனது சிங்கள மகாசபையுடன் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து சுதந்திர இலங்கையில் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் முதலாவது அமைச்சரவையில் உள்ளூராட்சி அமைச்சராக பதவியேற்ற பண்டாரநாயக்க மக்களுக்கு நெருக்கமாக அரசாங்கத்தைக் கொண்டு செல்வதற்கான ஒரு வழிமுறையாக மாகாணசபை திட்டத்துக்கு மீண்டும் உயிர்கொடுக்க முயற்சித்த போதிலும், அமைச்சர்களாக முழுமையாக தாங்கள் அனுபவித்த அதிகாரங்களை இழக்க அவரது சகாக்கள் விரும்பவில்லை. அதனால் பண்டாரநாயக்காவினால். மீண்டும் மாகாணசபை திட்டத்தை முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது.

பண்டாரநாயக்க மாகாணசபைகளை அமைப்பது குறித்து சிந்தித்த காலப்பகுதியில் அவற்றுக்கு இன்று இருப்பதைப் போன்று இனத்துவ அரசியல் பரிமாணம் ஒன்று இருக்கவில்லை என்பதால் பெருமளவுக்கு பிரச்னைகள் இல்லாமல் அவற்றை அன்று அமைத்திருக்க முடியும் என்பது ஜெயராஜின் அவதானிப்பாக இருக்கிறது.

1951 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறிய பண்டாரநாயக்க சிறிலங்கா சுதந்திர கட்சியை அமைத்து ஐந்து வருடங்களில் பிரதமராக பதவிக்கு வந்த பிறகு அவரது அரசாங்கம் முன்னெடுத்த கொள்கைகள் இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்கள் தங்களது எதிர்கால இருப்புக் குறித்து அச்சம் கொள்கிற அளவுக்கு இனவாத அரசியலை முனைப்படையச் செய்தன. தனிச் சிங்களச் சட்டம் அதில் முக்கியமானது.

இலங்கையில் முதன்முதலாக சமஷ்டி ஆட்சிமுறைக்காக குரல்கொடுத்த ஒரு அறிவார்ந்த ஒரு தலைவர், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் எஸ். ஜே வி. செல்வநாயகத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது சமஷ்டி பற்றி பேசுவதை தவிர்ப்பதில் கடுமையான கவனம் செலுத்துகின்ற அளவுக்கு அவரின் கொள்கைகளில் தலைகீழான மாற்றம் ஏற்பட்டது என்பது கவலைக்குரியது.


இன்று நடைமுறையில் இருக்கின்ற மாகாண சபைகள் முறை 39 வருடங்களுக்கு முன்னர் இந்திய - இலங்கை சமாதான. உடன்படிக்கையை தொடர்ந்து ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அது, அடிப்படையில் பல தசாப்தங்களுக்கு முன்னர் பண்டாரநாயக்கவின் சிந்தனையில் உதித்ததே என்பது கவனிக்கத் தக்கது.

பிராந்திய சபைகளை அமைப்பதற்காக செல்வநாயகத்துடன் பண்டாரநாயக்க செய்துகொண்ட 1957 ஒப்பந்தத்துக்கு எதிராக தென்னிலங்கையில் எதிர்ப்பைக் கிளப்புவதில் முன்னரங்கத்தில் நின்ற ஜெயவர்தன மூன்று தசாப்தங்களுக்கு பிறகு மாகாணசபைகளை அமைப்பதற்கு வழிவகுத்த நிகழ்வுப் போக்குகளை இனிமேல் பார்ப்போம்.

பிராந்தியங்களுக்கு அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடு எதையும் ஒருபோதும் கொண்டிராத இலங்கையில் இந்தியாவின் தலையீடு இல்லாமல் இருந்திருந்தால் மாகாணசபைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காது என்பதில் சந்தேகமில்லை.

தேசிய இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய சகல விவகாரங்களிலும் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவரான ஜனாதிபதி ஜெயவர்தனவை அந்த பிரச்சினைக்கு முடிவைக் கொண்டுவர வேண்டும் என்றால் அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடு ஒன்று அவசியம் என்று நம்பவைப்பதில் அல்லது வழிக்குக் கொண்டுவருவதில் இந்தியா அந்த நேரத்தில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியது.

1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு இலங்கையில் முரண்பட்டு நின்ற இரு தரப்பினருக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்வதற்கு நல்லெண்ண உதவிகளை வழங்க முன்வந்த அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தனது விசேட தூதுவராக நியமித்த கோபாலசுவாமி பார்த்தசாரதிக்கு ஜெயவர்தனவை இணங்க வைப்பதில் முக்கிய பங்கு இருந்தது.



தமிழர் அரசியல் சமுதாயம் சமஷ்டி முறைத் தீர்வொன்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், புதிய அரசியலமைப்பை அரசாங்கம் கொண்டுவரும் பட்சத்தில் முதலில் மாகாணசபைகளைக் காப்பாற்றப் போராடவேண்டியிருக்கும்.

தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தலைசிறந்த அரசியலமைப்புச் சட்ட நிபுணருமான காலஞ்சென்ற கலாநிதி நீலன் திருச்செல்வம் பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரை ஒன்றில், ஜனாதிபதி ஜெயவர்தன ஒரு அரசியலமைப்பு நிபுணராக இருந்த போதிலும் கூட, அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டின் பயனுடைத் தன்மை மீது அவருக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பெரும் கஷ்டப்பட வேண்டியிருந்தது என்று தன்னிடம் பார்த்தசாரதி ஒரு தடவை கூறியதாக குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, முன்னாள் இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜெயதிலக எழுதிய கட்டுரையொன்றில் கறுப்பு ஜூலைக்கு பின்னரான காலப் பகுதியில் இலங்கையில் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது எதிர்நோக்க வேண்டியிருந்த கஷ்டங்கள் குறித்து பார்த்தசாரதி புதுடில்லி சந்திப்பொன்றில் தன்னிடம் கூறியதாக தெரிவித்திருந்தார்.

1984 பேச்சுவார்த்தைகளின்போது ஒரு கட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்தனவின் வேண்டுகோளின் பேரில் கண்டியில் உள்ள பௌத்தபீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்ததாகவும் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பது சாத்தியமில்லாத அளவுக்கு கடுமையானது என்பதை தெரிந்து கொண்டதாகவும் பார்த்தசாரதி தன்னிடம் கூறியதாகவும் கலாநிதி ஜெயதிலக எழுதியிருந்தார்.

சிக்கல் மிகுந்த மத்தியஸ்த முயற்சிகளை பொறுமையுடன் முன்னெடுப்பதற்கு எமது பிராந்தியத்தின் பூகோள அரசியலை முறையாகப் புரிந்து கொண்டவராகவும் இலங்கையின் அரசியலமைப்பின் சிக்கலான தன்மைகளைப் புரிந்து கொண்டு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வல்லவராகவும் இருக்கக்கூடிய இராஜதந்திரி ஒருவரே அவசியம் என்று கருதியதனால்தான் இந்திரா காந்தி தனது நம்பிக்கைக்கு பெரிதும் பாத்திரமானவரான பார்த்தசாரதியை விசேட தூதுவராக அனுப்பினார். அவர் வெளியுறவுச் செயலாளர் உட்பட பல இராஜந்திர பதவிகளை வகித்தவர்.

தனது பணிக்கு முன்னதாக இருந்த சிக்கல்களும் இடறுகுழிகளும் பாரதூரமானவை என்பதை தெளிவாகப் புரிந்து கொண்ட பார்த்தசாரதியின் முதற்பணி அன்றைய அரசாங்கத் தலைவர்களினதும் எதிச்க்கட்சிகளின் தலைவர்களினதும் அச்சங்கள் , ஏக்கங்கள், பிரமைகள் மற்றும் எண்ணப் போக்குகளை மிகுந்த நிதானத்துடன் கையாள வேண்டியதாக இருந்தது. இலங்கையின் பழைய இடதுசாரித் தலைவர்களுடன் அவரால் எளிதாகப் பழகிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தலைவர்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய அரசியல் தெரிவுகளின் மட்டுப்பாடுகளை புரிந்துகொள்ள வேண்டும் என்பதும் பேச்சுவார்த்தை செயன்முறைகள் தொடர்பில் அடிப்படைவாத நிலைப்பாடுகளில் பிடிவாதமாக இருப்பவர்கள் போராடிக்கொண்டே பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட வேண்டும் என்பதே அவர்களுக்கான பார்த்தசாரதியின் ஆலோசனையாக இருந்ததாக கலாநிதி திருச்செல்வம் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

பிராந்திய சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கான ஒரு தொகுதி யோசனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தியதே பார்த்தசாரதியின் தனித்துவமான பங்களிப்பாகும். அந்த யோசனைகளே 'இணைப்பு - சி' என்று பிரபல்யமாக அழைக்கப்பட்டவையாகும். 1983 ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் வரை கொழும்பிலும் புதுடில்லியிலும் ஜனாதிபதி ஜெயவர்தனவுடன் நடத்திய சந்திப்புக்களில் இந்த இணைப்பு - சியைப் பூரணப்படுத்தும் செயற்பாடுகளை பார்த்தசாரதி நிறைவு செய்தார் என்று கூறப்பட்டது.

தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் ஜெயவர்தன அரசாங்கத்துக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிப்பதில் ஒரு முழுநிறைவான சமரசப் பேச்சுவார்த்தையாளருக்குரிய சகல திறமைகளையும் மதிநுட்பத்தையும் வெளிக்கொணர்ந்தாகக் கூறப்பட்ட பார்த்தசாரதியினால் முன்வைக்கப்பட்ட திட்டத்தின் அம்சங்களை ஜெயவர்தன உடனடியாகவே இணங்கிக் கொண்டார்.

ஆனால், அதிகாரப் பரவலாக்கத்துக்கான அடிப்படை அலகு தொடர்பில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதென்பது தொடர்ந்தும் கஷ்டமானதாகவே இருந்தது. ஒரு மாகாணத்திற்குள் இருக்கும் மாவட்டங்களை இணைத்த பெரியதொரு அதிகாரப்பரவலாக்கல் அலகு தமிழர்களுக்கு வழங்கப்படக்கூடாத ஒரு சலுகையாக நோக்கப்பட்டது.

பிறகு 1983 டிசம்பரில் ஜெயவர்தன புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தனியொரு மொழிரீதியான பிராந்தியத்தை அமைப்பதற்கான யோசனையை முன்வைப்பதற்கு இந்திரா காந்தியின் ஆதரவை பார்த்தசாரதி பெற்றிருந்தார். அத்தகைய யோசனைக்கு இணங்குவதன் மூலம் தென்னிலங்கையில் தனது ஆதரவுத்தளத்தை இழப்பதற்கு ஜெயவர்தன விரும்பவில்லை. ஆனால், அவர் விட்டுக்கொடுப்பு ஒன்றைச் செய்வதற்கு இணங்கினார்.

இணைப்பு - சி யில் பிராந்திய சபைகள் என்று இருந்ததை மாகாண மட்டத்துக்கு மட்டுப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். புதுடில்லி அஷோக் ஹோட்டலில் நடைபெற்ற அந்த பேச்சுவார்த்தையின் போது இந்தியத் தரப்பின் நெருக்குதலினால் ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த ஜெயவர்தன, பார்த்தசாரதியை நோக்கி "நான் எங்கே கையெழுத்திட வேண்டும்" என்று கேட்டதாகவும் அதற்கு பதிலளித்த பார்த்தசாரதி "இது ஒரு உடன்படிக்கை அல்ல. கையெழுத்து ஒன்றும் தேவையில்லை" என்று கூறியதாக அந்த நேரத்தில் இந்திய ஊடகங்களில் செய்தி வெளயாகியது.

1984 ஜனவரியில் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாட்டில் இணைப்பு - சி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், சிங்கள அமைப்புக்கள், பௌத்த குழுக்கள் மற்றும் சில எதிர்க்கட்சிகளிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பைத் தொடர்ந்து ஜெயவர்தன அதிலிருந்து தன்னைத் தூரவிலக் கிக் கொண்டார். இணைப்பு - சி யின் உள்ளடக்கங்களுக்கு தான் எந்த வகையிலும் பொறுப்பு இல்லை என்று அவர் கைகழுவிவிட்டார். அதனால் சர்வகட்சி மகாநாடு தோல்வியில் முடிவடைந்தது.

இந்திரா காந்தியின் மறைவுக்கு பிறகு அவரது மகன் ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவியேற்றதை தொடர்ந்து 1985 முற்பகுதியில் புதுடில்லியில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், தாயாரின் நம்பிக்கைக்குரியவராக விளங்கிய பார்த்தசாரதியை பேச்சுவார்த்தை செயன்முறைகளில் ஈடுபடுத்துவதை மகன் தவிர்த்தார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் வழிகாட்டலுக்காகவும் ஆலோசனைக்காகவும் பெருமளவுக்கு பார்த்தசாரதியில் தங்கியிருந்த காரணத்தால் அவரின் வகிபாகத்தில் இலங்கை அரசாங்கத்தரப்புக்கு சந்தேகம் ஏற்படத் தொடங்கியது அவரை ஓரங்கட்டுவதற்கு ராஜீவ் காந்தி தீர்மானித்தற்கான ஒரு காரணி என்று கூறப்பட்டது.

வெளியுறவு செயலாளர் ரொமேஷ் பண்டாரி, அமைச்சர்கள் பி. சிதம்பரம் மற்றும் நட்டார்சிங் ஆகியோரையே

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் அயலக இராஜதந்திரமும் மேற்காசிய சவாலும்



சுஹாசினி ஹைதர்

இந்து சமுத்திரத்தில் ஈரானியப் போர்க் கப்பலான ஐ.ஆர். ஐ.எஸ். டினாவை அமெரிக்கா மார்ச் 4 ஆம் திகதி மூழ்கடித்ததுடன் மேற்காசியப் போர் தெற்காசியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டது. பெப்ரவரி 28 தொடங்கிய போர் கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் - உணவு மற்றும் சமையல் எரிவாயு, பசளை வகைகள் என்று அன்றாட தேவைகளைப் பெற்றக்கொள்வதிலும் பயணங்கள், வர்த்தகம் போக்குவரத்தைச் செய்வதிலும் இடையூறுகள், மேற்காசியப் பிராந்தியத்தில் வேலைசெய்யும் குடிமக்களின் பாதுகாப்பு என்று - பல்வேறு வழிகளில் தெற்காசிய வீடுகளை வந்தடைந்திருக்கிறது.

ஒரு கோடி இந்தியர்கள், 50 இலட்சம் பாகிஸ்தானியர்கள், 50 இலட்சத்துக்கும் 60 இலட்சத்துக்கும் இடைப்பட்ட பங்களாதேஷிகள், 20 இலட்சம் நேபாளியர்கள் மற்றும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான இலங்கையர்கள், பூட்டானியர்கள் மற்றும் மாலைதீவுக்காரர்கள் உட்பட சுமார் 2 கோடி 50 இலட்சம் தெற்காசியர்கள் மேற்காசியாவில் வேலை செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

50 இலட்சத்துக்கும் 80 இலட்சத்துக்கும் இடைப்பட்ட ஆப்கானியர்கள் ஈரானில் அகதிகளாக தங்கியிருக்கிறார்கள். இதற்கு புறம்பாக, வேறு தெற்காசியர்களுடன் சேர்ந்து கடலோடிகளாக அல்லது கப்பல் பணியாளர்களாக உலகம் பூராவும் பணியாற்றுபவர்களில் சுமார் 15 சதவீதத்தினர் இந்தியர்கள். இவர்கள் எல்லோரும் குறிப்பாக, ஹோர்முஸ் நீரிணையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பணியாற்றுபவர்கள் ஆபத்தை எதிர்நோக்குகிறார்கள்.

போர் நெருக்கடியில் அடுத்த நடவடிக்கைகள் குறித்து புதுடில்லி திட்டங்களை வகுத்துவரும் நிலையில், முழு பிராந்தியத்துக்கும் எத்தகைய தாக்கங்கள் ஏற்படும் என்பதைப் பற்றி மாத்திரமல்ல, ஒவ்வொரு அயல் நாட்டுடனான உறவுகளில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்தும் இந்தியா பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

### வியப்பைத் தரும் இந்திய நிலைப்பாடு

போரின் தொடக்கத்தில் - அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் தாக்குதல்களில் ஈரானின் அதியுயர் தலைவர் அயத்தொல்லா அலி காமெனியும் அவரது குடும்பத்தின் பல உறுப்பினர்களும் கொல்லப்பட்டபோது - புதுடில்லி வெளிக்காட்டிய பிரதிபலிப்பு பிராந்தியத்தின் மற்றைய நாடுகள் பலவற்றை விடவும் வேறுபட்டதாக இருந்தது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டியது முக்கியமானதாகும்.

காமெனியின் மரணத்தையடுத்து உடனடியாகவே பாகிஸ்தானும் பங்களாதே/ம் கண்டன அறிக்கைகளை வெளியிட்டன. மாலைதீவு ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதல்களையும் ஈரானின் பதில் தாக்குதல்களையும் கண்டனம் செய்தது. இலங்கை வெளியுறவு அமைச்சர் தனது அனுதாபங்களைத் தெரிவித்தார். இதற்கு மாறாக, புதுடில்லியில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்கு வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரியை அனுப்பி வைப்பதற்கு இந்திய வெளியுறவு அமைச்சுக்கு ஐந்து நாட்கள் எடுத்தது.

மினாப் நகரில் கடற்படைத்தளம் ஒன்றுக்கு அருகாமையில் இருந்த மகளிர் பாடசாலை ஒன்றின் மீதான குண்டுவீச்சுக்களில் 150 க்கும் அதிகமான மாணவிகளும் ஆசிரியைகளும் கொல்லப்பட்டது தொடர்பாக "கவலை" தெரிவிப்பதற்கு இந்திய வெளியுறவு அமைச்சுக்கு இன்னொரு வாரம் எடுத்தது. பரந்தளவிலான பிராந்தியத்திலும் கூட தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் (ஆசியான்) வெளியுறவு அமைச்சர்கள் தாக்குதல்களை தொடங்கியமைக்காக அமெரிக்காவையும் இஸ்ரேலையும் பிறகு தாக்குதலை நடத்தியமைக்காக ஈரானையும் கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டனர்.

இது வெறும் தோற்றத்தைப் பற்றியது அல்ல, இந்தியாவினதும் தெற்காசியாவின் - கலாச்சார விழுமியங்களைப் பற்றியது. அவரது கொள்கைகள் எவ்வாறு நோக்கப்பட்டன என்பதற்கு அப்பால், சர்வதேச நியமங்களை மீறி ஒரு அரசின் 86 வயதான மதத்தலைவர் காமெனி கொல்லப்பட்டிருக்கிறார்.

அடுத்தடுத்த நாட்களில் இந்தியா வெளியிட்ட அறிக்கைகளில் ஈரானுக்கும் லெபனானுக்கும் எதிரான அமெரிக்கா அல்லது இஸ்ரேலின் தாக்குதல்கள் கண்டிக்கப்படாமல், ஈரானின் பதில் தாக்குதல்கள் கண்டனம் செய்யப்பட்டது வழமைமீறிய ஒரு செயலாகும்.

தாக்குதல்களுக்கு இரு நாட்கள் முன்னர் பிரதமர் நரேந்திர மோடி இஸ்ரேலுக்கு மேற்கொண்ட விஜயம் மற்றும் 'தற்போதைய தருணத்திலும் அதற்கு அப்பாலும்' இந்தியா இஸ்ரேல் பக்கத்தில் நிற்கும் என்று அந்த நாட்டுப் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அவர் செய்த அறிவிப்பின் பின்புலத்தில் இந்தியாவின் ஆரம்பப் பிரதிபலிப்புக்களை விளக்குவது சாத்தியமாயிருக்கலாம். ஆனால், விரிவடையும் போரின் பயங்கரம் அதிகரிக்கின்ற நிலையில் அதுவும் நின்றுபிடித்து திருப்பித் தாக்குவதில் ஈரான் அதன் வலிமையை வெளிக்காட்டுகின்ற போது பெருமளவுக்கு சமநிலையான ஒரு பிரதிபலிப்பைக் காண்பிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

பிராந்தியப் பிரச்சினைகளில் பக்கம் சாராமல் மேற்காசியாவின் ஒவ்வொரு நாட்டுடனும் உறுதிவாய்ந்த இரு தரப்பு உறவுகளை கட்டியெழுப்புவது என்ற இந்தியாவின் பாரம்பரியமான நிலைப்பாடு, நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்ட ஒரு அந்தஸ்தில் அதை எப்போதுமே வைத்திருந்தது. ஹோர்முஸ் நீரிணையின் ஊடாக இந்தியக் கப்பல்கள் சென்றுவருவதற்கு உதவுமாறு ஈரானிய ஜனாதிபதி பெசெஷ்கியானிடம் மோடி



**அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையில் தற்போது சமநிலையான செயற்பாட்டை கைவிட்டிருக்கும் இந்தியா மேற்காசியக் கொள்கையில் சமநிலையான கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்க வேண்டிய நேரம் இது. கயிற்றில் நடப்பதைப் போன்ற இந்த செயல்பாட்டில் இந்தியாவின் பாரம்பரியமான நிலை பதற்றமானதாக இருக்கலாம். ஆனால், இந்திய மக்களினதும் அயல்நாடுகளினதும் மக்களினதும் எதிர காலத்தை வழிநடத்தக்கூடிய வாய்ப்பான ஒரு அந்தஸ்தை அது புதுடில்லிக்கு கொடுக்கும்.**

கேட்டுக்கொண்டபோது அந்த நல்லெண்ணமும் நம்பிக்கையும் நிரூபணமானது.

மேலும், உயிர்தப்பிய கடற்படை வீரர்களுக்கு உதவ முயற்சிக்காமல் இலங்கைக்கு அண்மையாக ஈரானிய கப்பலான டினாவை மூழ்கடித்ததை வெட்கங்கெட்ட முறையில் பெருமையாகப் பேசிய அமெரிக்காவின் செயல் பிராந்தியத்தில் பலருக்கு அதிர்ச்சியாக இருந்தது. மீட்பு நடவடிக்கைகளில் இலங்கையின் கடற்படைக்கு இந்திய கடற்படை உடனடியாகச் செய்த உதவியும் பிராந்தியத்தில் நின்ற மற்றைய ஈரானிய இராணுவக் கப்பல்களை துறைமுகங்களில் பாதுகாப்பாக தரித்து நிற்க டில்லியும் கொழும்பும் அனுமதித்ததும் மெச்சத்தக்கது.

ஆனால், விசாகபட்டினத்தில் பெப்ரவரியில் நடைபெற்ற இந்தியாவின் சர்வதேச கடற்படை பயிற்சியிலும் (மிலான்2026) சர்வதேச போர்க்கப்பல் கண்காட்சியிலும் விருந்தினர்களாகப் பங்குபற்றிய ஈரானிய கடற்படை வீரர்களின் மரணங்களுக்கு அனுதாபம் தெரிவிக்க இந்திய கடற்படை தவறியதை விளக்கிக் கொள்வது கஷ்டமாக இருக்கிறது.

### பொருளாதார, பிராந்திய, கடல்சார் பாதுகாப்பு

தற்போது எந்த உறவையும் கொண்டிராத பாகிஸ்தானைத் தவிர, ஏனைய அயல்நாடுகளின் கவலைகள் தொடர்பில் அக்கறை கொண்டிருப்பதை அவற்றுக்கு இந்தியா உறுதியாகத் தெரிவித்து நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். எரிசக்தி தட்டுப்பாடு தீவிரமடையும் நிலையில், பெற்றோலுக்கும் டீசலுக்கும் பங்களாதேஷ், இலங்கை மற்றும் மாலைதீவு புதுடில்லியிடம் வேண்டுகோள் விடுத்தன. நிலைவரம் மேலும் மோசமடையுமானால், நிலத்தால் சூழப்பட்ட நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளிடமிருந்தும் வேண்டுகோள்கள் வரலாம்.

கொரோனா நோய் பரவியதனால் ஏற்பட்ட நெருக்கடியைக் கையாண்ட விடயத்தில் 2021 ஆம் ஆண்டில் இந்தியா அதன் அயல்நாடுகளுக்கு பல வாரங்களாக தடுப்பூசிகளை விநியோகிக்காமல் இருந்ததைப் போன்ற நிலைவரம் மீண்டும் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு இந்தியா முன்கூட்டியே திட்டத்தை வகுக்க வேண்டும். அந்த கசப்பான நினைவுகள் மறைந்துபோவதற்கு இந்தியாவின் "தடுப்பூசித் திட்டம்" பெரிதும் உதவியது. அத்தகைய சூழ்நிலைகளில் பிராந்தியத்தில் உள்ள சகலரினதும் தேவைகளையும் கவனிக்கும் அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

2020 ஆம் ஆண்டுக்குப் பிறகு - கொவிட் - 19,. எல்லையோரம் இந்திய - சீனப் பதற்றநிலை காரணமாக விநியோகச் சங்கிலி தடைப்பட்டமை, ரஷ்ய - உக்ரெய்ன் போருக்கு மத்தியில் தானியங்கள், எண்ணெய் மற்றும் யூறியா மீதான தடைகள், மேற்காசியாவில் தொடர்ச்சியாக ஏற்பட்ட மோதல்களின் விளைவாக அந்த நாடுகளில் தொழில் பார்ப்பவர்கள் அனுப்பும் பணத்தில் ஏற்ற இறக்கங்கள், பிராந்தியத்தில் பெரும் எண்ணிக்கையானவர்கள் வேலை செய்யும் ஆடைத் தொழிற்துறை மற்றும் கடலுணவு ஏற்றுமதி ஆகியவற்றைப் பாதிக்கக்கூடியதாக ட்ரம்ப் நிருவாகம் கடைப்பிடித்த வரிக் கொள்கையின் தாக்கம், அமைதியிழந்த இளஞ்சந்தியைக் கொண்ட பிராந்தியத்தில் தொழில் வாய்ப்புகள் மீது செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தும் தாக்கத்தின் அதிகரிப்பு - என்று தெற்காசியா பல்வேறு பிரச்சினைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

### இளைஞர் கிளர்ச்சிகள்

இந்தியாவின் அயல் நாடுகளில் இளைஞர் கிளர்ச்சிகள் மூண்டு அதன் விளைவாக புதிய அரசாங்கங்கள் பதவிக்கு வந்தது ஒன்றும் தற்செயலானது அல்ல. இறுதியாக, மார்ச் 5 நேபாளத்தில் நடைபெற்ற தேர்தலில் இளைய தலைமுறையின் (Z - Generation) முதல் அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்திருக்கிறது.

2024 பொதுத்தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு ஏற்பட்ட இழப்புகளின் விளைவாக மோடியின் முதன் முதலான சிறுபான்மை கூட்டரசாங்கம் பதவிக்கு வந்தது. தொழில் வாய்ப்புகள் இல்லாததன் காரணமாக இளைஞர்கள் மத்தியில் வளர்ந்த அதிருப்தியும் அதற்கு ஒரு காரணம். இந்த மாற்றங்கள் இந்தியாவின் இராஜதந்திரத்தின் மீது தாக்கத்தைச் செலுத்தின. புதிய ஆணைகளுடன் தெரிந்தெடுக்கப்பட்ட இந்த தலைவர்களுடன் (அவர்கள் இந்தியாவுக்கு பெருமளவுக்கு கடமைப்பட்டவர்கள் அல்ல) விவகாரங்களைக் கையாளுவதற்கு மோடி அரசாங்கம் அதன் முன்னைய வலிமையான அயலுறவுக் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது.

ஈரானின் டினா கப்பல் அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம், பிராந்தியத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பை வழங்கும் நாடு என்ற தனது நிலையைச் சவாலுக்கு உள்ளாக்கியிருக்கிறது என்பததையும் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்கா, ஜப்பான், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய மூலோபாயக் கூட்டணியான 'குவாட்'டின் (Quad) உறுப்புநாடாக இந்தியா இருக்கின்ற போதிலும், இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா தாக்குதலை நடத்தியிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

2025 ஜூலையில் இறுதியாக நடத்திய தங்களது கூட்டத்தில் குவாட் வெளியுறவு அமைச்சர்கள் வெளியிட்ட அறிக்கையில் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் 'சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும்' பேணுவதில் தங்களுக்குரிய கடப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதுடன் தற்போதுள்ள நிலைவரத்தை படைபலத்தின் மூலமாகவோ அல்லது கட்டாயப்படுத்துவதன் மூலமாகவோ மாற்றுவதற்கு ஒருதலைப்பட்சமாக மேற்கொள்ளப்படக்கூடிய எந்தவொரு முயற்சியையும் (இது சீனாவைக் குறிப்பது) உறுதியாக எதிர்ப்பது என்றும் பிரகடனம் செய்தனர்.

அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக செயல்படுகின்ற நிலையில், இந்தியா எதிர்காலத்தில் எதிர்பாராத விதமாகச்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை வாரமலர் கட்டுரை


# ஈரானிய மக்களின் ஒற்றுமையில் ட்ரம்ப் கற்றுக்கொள்ளும் பாடமும் இலங்கையின் அணிசேரா நிலையும்!

பனங்காட்டான்





**மூன்றுவார காலயுத்தம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு கற்றுக் கொடுக்கும் பாடம் அவரை வெறுப்புநிலைக்கு தள்ளியிருக்கவேண்டும். அதனால்தான் நேட்டோநாடுகளை கோழைகள் என்றும் காகிதபுலிகள் என்றும் கோபாவேசத்தில் தாக்கியுள்ளார். ஈரானிய புதிய அதிபர் மொஜிதபா கமேனி தமது அறிக்கையில் எதிரி தோற்கடிக்கப்பட்டார் என்று குறிப்பிட்டிருப்பது நேரடியாக ட்ரம்பையே குத்திக் காட்டுகிறது. போர் முடிந்ததா? தொடருமா?**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

'ஈரானியர்கள் தங்கள் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியை எடுத்துக் கொள்ளவேண்டும். இது பல தலைமுறைகளுக்கு உங்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும' என்று ஈரானிய மக்களின் விடிவுக்காகவே தாம் போரை தொடங்கப் போவதாககருத்துப்படதெரிவித்தஅமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பெப்ரவரி 28ம் திகதி ஈரான் மீதான போரை ஆரம்பித்தார்.

ஈரானின் அணு ஆயுதத்திறன் அதன் அணுசக்தித் திட்டத்துக்கானது என்று கூறியட்ரம்ப், தாம் ஆரம்பிக்கப்போகும் போர் நான்கு அல்லது ஐந்து வாரங்கள் நீடிக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார். தமது எண்ணத்தை ஈடேற்றுவதற்காக, ஐரோப்பாவில் தமது நல்ல நண்பர்களை ஈரானின் நீண்டதூர ஏவுகணைகள் அச்சுறுத்தக்கூடும் எனவும் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தார்.

அமெரிக்காவிடம் வரம்பற்ற ஆயுதங்கள் இருப்பதாகவும், போரைஎன்றென்றும் வெற்றிகரமாக நடத்தமுடியுமென்றும் மூன்று நாட்களின் பின்னர் (மார்ச் 2ம் திகதி) கூறினார். ஆனால், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மார்கோதுபியோ போர் பற்றிக் குறிப்பிடுகையில், இஸ்ரேலின் உறுதிப்பாடு ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்காவை நிர்ப்பந்தித்தது என்று புதியதொரு தகவலை தெரிவித்தார்.

ஈரானிடம் இருக்கும் தாக்குதல் ஏவுகணைகளைஅழிப்பது, அதன் ஏவுகணை உற்பத்தியை நிர்மூலம் ஆக்குவது, கடற்படை மற்றும் பாதுகாப்பு உட்கட்டமைப்பை தகர்ப்பது அதன்மீதான தாக்குதலின் நோக்கமெனமார்ச் 4ம் திகதி பென்டகன் தலைவர் பீற் ஹெக்செத் ஊடகங்களுக்குக் கூறினார்.

இதன் இரண்டு நாட்களின் பின்னர் போர் நிலைமை பற்றி கூறிய ட்ரம்ப், நிபந்தனையற்ற சரணடைவதைத் தவிர ஈரானுக்கு வேறுவழி இருக்காது என்று போர் வெற்றிப்பாணி போன்று அறிவித்தார். இதற்கு மூன்றுநாட்களின் பின்னர், இதுவெறும் ஆரம்பம் மட்டுமே என்று கூறிவிட்டு ஒருநாள் கழித்து போர் மிகவும் முழுமையானது என்று தாம் நினைப்பதாகத் தெரிவித்தார்.

இதற்கு மறுநாள், நாங்கள் ஏற்கனவே பலவழிகளால் வெற்றிபெற்றுள்ளோம், ஆனால் போதுமான அளவு வெற்றிபெறவில்லையென்று அளவைக் கணக்கில் அறிவித்தார்.அதேநாளன்று செய்தியாளர்கள் இவரிடம் போர் தொடங்குகிறதா அல்லது முடிந்துவிட்டதா என்று கேட்டபோது - நீங்கள் இரண்டையும் சொல்லமுடியும் என்று பதிலளித்தபோது செய்தியாளர்கள் தங்கள் புருவங்களை உயர்த்திக் கொண்டனர்.

மார்ச் மாதம் 13ம் திகதி ஒரு நேர்காணலில், போர் தனது எலும்புகளில் உணரும்போது முடிவடையும் என்று குதர்க்கமாகப் பதிலளித்தார்.

மார்ச் மாதம் 17ம் திகதி இவர் முற்றிலும் எதிர்பார்த்திராத ஓர் அதிர்ச்சிச் சம்பவம் இடம்பெற்றது. அமெரிக்காவின் தேசிய பயங்கரவாத மையத்தின் இயக்குனர் ஜோசெப் கென்ட் முன்னறிவிப்பு ஏதுமின்றி அதிரடியாக தமது பதவியை ராஜினாமாசெய்து முழு உலகுக்கும் போர் பற்றிய மறுபக்கச் செய்தியை வெளிப்படுத்தினார்.

'ஈரானில் நடந்துவரும் போரை நான் நல்ல மனச்சாட்சியுடன் ஆதரிக்க முடியாது' என்ற இவரது பதவிவிலகல் தொடர்பான அறிவிப்பு ட்ரம்பை அதிர்ச்சிக்குள்ளாக்கி நிலைகுலையச் செய்ததாயினும் அதனைஅவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

ஈரான் மீது அமெரிக்கா போர் புரிந்து கொண்டிருக்கையில் அதனை ஆதரிக்க மேற்கு நாடுகள் ஆர்வம் காட்டவில்லை. பல வெளிநாடுகளின் ஆதரவை ட்ரம்ப் நாடியபோதும் அவருக்குச் சாதகமான சமிக்ஞை எதுவும் கிடைக்கவில்லை. முக்கியமாக நேட்டோ நாடுகளின் ஆதரவை அவர் கேட்டிருந்தார். அது கிடைக்காததால் கோபம் கொண்ட அவர் நேட்டோ நாடுகளை கோழைகள் என்றும் காகிதப் புலிகள் என்றும் திட்டித் தீர்த்தார்.அதே சமயம் தமது முகாமுக்குள்ளிருந்து தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் இயக்குனர் ஜோசெப் கென்ட் விலகியது இவருக்கு தோல்வியாக அமைந்ததை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்தியது.

வாஷிங்டனில் பிளவு உண்டானதால் அந்தக் கூடாரம் பலவீனமடைந்திருக்கிறது என்பதை பலரும் பகிரங்கமாக அறிந்து கொண்டனர். இது ஈரானுக்கு பலமூட்டுவதாக மாறியது. இதன் பின்னர் அமெரிக்கா போருக்கான காலக்கெடுவை தீர்மானிக்கவில்லையென்று கூறிய ஹெக்சேட் போரை எப்போது நிறுத்த வேண்டுமென ட்ரம்பே தீர்மானிப்பார் எனவும் அறிவித்தார்.

கடந்த 20ம் திகதி ஒரு முக்கியமான அறிவிப்பை ட்ரம்ப் விடுத்தார். ஈரான் போரில் தங்களின் மகத்தான ராணுவ முயற்சிகளை நிறுத்துவது குறித்து தாங்கள் பரிசீலித்து வருவதாக தெரிவித்த அவர், தங்கள் நோக்கங்களை அடைவதற்கு மிகநெருக்கமாக இருப்பதாகச் சொன்னார். எனினும், போர் நிறுத்தம் செய்ய விரும்பவில்லையென்று தெரிவித்துக் கொண்டார்.

ஈரான் தலைநகரான டெஃரானிலுள்ள பாலிஸ்ரிக் ஏவுகணைகளை அச்சுறுத்தல் என்று விபரித்து அதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்கே போரை ஆரம்பித்ததாக கூறியட்ரம்ப், மூன்றுவார பேரழிவுகளின் பின்னர் மெதுவாகபோர் நிறுத்தத்துக்கு செல்லும் நிலைக்கு வந்திருப்பதாக சர்வதேசம் கருதுகின்றது.

இந்தக் கருத்தை வலுவூட்டுவதாக ஈரானின் புதியதலைவர் (போரில் கொல்லப்பட்டதலைவர் கமேனியின் புதல்வர்) மொஜிதபா கமேனியின் பெயரில் வெளிவந்த செய்தி அமைந்துள்ளது. பாரசீகத்தின் புத்தாண்டை முன்னிட்டு இவர் வெளியிட்ட செய்தியில் - எதிரி தோற்கடிக்கப்பட்டார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது தொடுக்கப்பட்ட போரை ட்ரம்பின் போர் என்று ஏற்கனவே விபரித்திருந்த ஈரானின் புதிய அதிபர், எதிரி தோற்கடிக்கப்பட்டார் என்ற வாசகத்தினூடாக ட்ரம்ப் தோற்கடிக்கப்பட்டார் என்று சுட்டியதாக பார்க்கக்கூடியதாகவுள்ளது. ஈரானின் ஒற்றுமை எதிரியை தோற்கடித்து விட்டது என்றும் இந்தச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் எழுச்சியுடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு போராட்டமும் தோல்வியடையாது என்பதற்கு மொஜிதபா கமேனியின் அறிக்கை வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. மத்தியகிழக்கு போர் முடிந்ததா இல்லையா என்று முழுமையாக புலப்படாத நிலையில் ஈரானிய அதிபர் எதிரி தோற்கடிக்கப்பட்டார் என்று விளித்தவாறு விடுக்கப்பட்டிருக்கும் செய்தி ஈரானிய மக்களையும் போர் வீரர்களையும் உற்சாகப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஈரானிய புதிய அதிபரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில வாசகங்கள் ஆழமாக சிந்திக்கப்பட்டபின்னர் தயாரிக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்துகிறது. 'நவ்றூஸ் பண்டிகையை கொண்டாடிய ஈரானிய மக்களின் உறுதி பாராட்டப்படவேண்டியது. இது தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய பாதுகாப்பின் கீழ் ஓர் எதிர்ப்புப் பொருளாதாரத்தின் ஆண்டை தொடக்கி வைத்துள்ளது" என்று இச்செய்தியின் தொடக்கம் தெரிவிக்கிறது.

ஈரானிய மக்களாகிய உங்களுடைய மத அறிவுசார் கலாசார மற்றும் அரசியல் பின்னணிகளால் உள்ள அனைத்து வேறுபாடுகளையும் மீறி உருவாகியுள்ள தனித்துவமான ஒற்றுமையின் காரணமாக எதிரி தோற்கடிக்கப்பட்டுள்ளார் என்று இங்கு மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஓரிருநாட்கள் தாக்குதல்களுக்குப் பின்னர் ஈரானிய மக்கள் அரசாங்கத்தை கவிழ்த்துவிடுவார்களென்று அமெரிக்காவும் இஸ்ரேலும் நம்பியதுபெரும் தவறான கணிப்பு என்றும் ஈரானிய தலைவர் இங்கு தெரிவித்துள்ளார்.

எதிரியிடம் ஒரு பிளவு ஏற்பட்டுள்ளது என்று இங்கு இவர் குறிப்பிட்டிருப்பது அமெரிக்காவின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் இயக்குனர் ஜோசெப் கென்ட் போரின் நடுவில் பதவி விலகியதை சுட்டுவதாக அமைந்துள்ளது. இந்தப் பதவிவிலகலால் வாஷிங்டன் பலவீனப்பட்டுள்ளது என்பது ஈரானிய தலைவரின் பார்வையாக அமைந்துள்ளது.

அதேசமயம் ஈரான் அரசமட்டத்திலும் மக்களிடையேயும் எந்தப் பிளவும் ஏற்படாது தொடர்ந்து நிலவிய ஒற்றுமையே எதிரிக்குக் கிடைத்துள்ள தோல்வி என்பதை இது மறைபொருளில் கூறுவதாக காணக்கூடியதாக விருக்கிறது.

அதிகார வெற்றிடம் ஏற்படும் என்ற அச்சத்தை கருத்தில் கொண்டே ஈரானிய அரசமைப்புச் சட்டம் வரைவு செய்யப்பட்டதாகவும், எந்தத் தருணத்திலும் அந்த அமைப்பு தொடர்ந்து இயங்குவதற்கான திறனை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதானது அது தோல்வியிலிருந்து தப்புவதற்கான நெறிமுறையாக அமைந்தது என்றும் போரை அவதானித்த நாடுகள் கருத்துவெளியிட்டுள்ளன.

வளைகுடா யுத்தத்தின் போது இலங்கை தனது அணிசேராக் கொள்கையை எவ்வாறு கடைப்பிடித்தது என்பது சர்வதேசத்தினால் நுணுக்கமாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை தமது நாடாளுமன்ற சிறப்புரையில் ஜனாதிபதி அநுரகுமர திஸ்ஸநாயக்க துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளார்.

போர்க் காலத்தில் ஈரானிய கப்பல்கள் இலங்கை கடற்பகுதிக்குள் நுழைய விரும்பியபோது மறுக்கப்பட்டதையும், அமெரிக்காவின் இரண்டு விமானங்கள் மத்தள விமானநிலையத்தில் இறங்குவதற்கு அனுமதிகேட்டபோது நிராகரிக்கப்பட்டதையும் குறிப்பிட்ட அநுரகுமர திஸ்ஸநாயக்க தமது அரசு நிதானமாக நடுநிலைமையை கடைப்பிடித்ததாக தெரிவித்துள்ளார். அதேவேளை சர்வதேச விதிமுறைகளுக்கமைய மனிதாபிமான அடிப்படையில் இலங்கைக் கடல் எல்லைக்கப்பால் எரிந்துகொண்டிருந்த கப்பலிலிருந்தவர்களை மீட்டதையும், காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலில் எதிர்க்கட்சிகள் என்பவை எப்போதும் எதனையும் எதிர்த்துக் கொண்டேயிருக்கவேண்டும் என்றபோக்கில் எதிர்பாராத போர்க்காலச் சூழலில் இலங்கை அரசுசந்திக்கும் நெருக்கடிகளை தங்களுக்கு சாதகமாக்கும் தன்மை வெளிப்படையாகவே காணப்படுகிறது. போர் முடியுமா முடியாதா என்பது தெரியாவிட்டாலும் அதன் தாக்கம் சிலகாலத்துக்கு தொடர்ந்தே இருக்கும். இது எல்லா நாடுகளுக்கு மேசோதனைக் காலமாக அமையலாம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது அரசியல்; சிரிக்கவும், சிந்திக்கவும்!



-யதீந்திரா

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான அரசியல் எவ்வாறு அமையக் கூடும் என்று இந்தக் கட்டுரையாளரிடம் ஒரு பார்வையிருந்தது. அதாவது, ஆண்டுகள் தோறும் ஒப்பாரிவைத்துவிட்டு ஒராண்டு முழுவதும் ஒய்வெடுத்துக் கொள்வது. இந்த அவதானிப்பு முற்றிலும் சரியென்பதே இதுவரையில் நிருபிக்கப்பட்டிருக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர் கலாநிதி ஜெய் மகேஸ்வரன் கூறியதாக ஒரு விடயத்தை வாசிக்கக் கிடைத்தது - அதாவது, பாலா அண்ணன் இறுதிவரையில் கல்லறைகளுக்கு வெள்ளையடித்துவிட்டு மன வருத்தத்தோடு இறந்து போனார். இப்போது நமது அரசியல்வாதிகள் வருடம் ஒரு முறை, விடுதலைப் புலிகளின் கல்லறைகளுக்கு முன்னால் பக்தியோடு நிற்கின்றனர். மகேஸ்வரன் வேறு யாருமல்ல, விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டவர்களில் ஒருவர். பாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் பங்கு கொண்ட மற்றவர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன். மகேஸ்வரன் தற்போது ஒரு சாமியாராக இருப்பதாக கேள்விப் பட்டிருக்கின்றேன்.

சமாதான பேச்சுவார்த்தைக் காலத்தில் மகேஸ்வரன் திருகோணமலைக்கும் வந்திருக்கின்றார். எட்ட இருந்து பார்த்திருக்கின்றேன். இன்று திரும்பிப் பார்த்தால் - நாங்கள் ஒரு விண்ணர் சமூகம் எங்களால் இந்தியாவை கையாள முடியும், அமெரிக்காவை கையாள முடியும் - ஏன் முழு உலகமும் எங்களைத்தான் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றது என்றெல்லாம் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்த போது, இறுதியில் எல்லோருமே எங்களுக்கு மொட்டை அடித்து, கரும்புள்ளி செம்புள்ளி குத்திவிட்டு, எதுவுமே நடக்காதது போன்று சென்றுவிட்டனர். இவ்வாறு கூறுகின்ற போது, உடனே மீசையை முறுக்க வேண்டும் போல் தோன்றலாம் - அவர்களை நாசகார சக்திகள், ஏகாதிபத்திய சக்திகள் என்று திட்டித் தீர்க்க வேண்டும் போல் எண்ணம் மேலிடலாம். அப்படியெல்லாம் பேசுபவர்கள் நம்மத்தியில் இப்போதும் உண்டு. ஆனால் வானத்தை நோக்கி எச்சில் உமிழ்வதால் இறுதியில் அசிங்கமாகப் போவது நமது முகம் மட்டும்தான். ஏனெனில் உலகின் அதிகார சக்திகளின் அணுகுமுறை நேற்று எப்படியோ, நாளையும் அப்படித்தான் - அது எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். நாம்தான் நிலைமையை கணித்து, அதற்கேற்ப நமது நலன்களை அடையும் வழியை அறிய வேண்டும்.

ஏனெனில் கொடுப்பதற்கு எதுமில்லை என்றால் பெறுவதைப் பற்றி யோசிக்க முடியாது - என்பதை விதியாகக் கொண்ட உலகில், எவர் மீதும் குற்றம் சாட்டுவதில் பயனில்லை. எங்களுடைய நலன்கள் எங்களுக்கு பெரிதென்று நாங்கள் எண்ணும் போது, மற்றவர்கள் தங்களின் நலன்களை நிறுத்துத்தானே செயற்படுவார்கள். ஆனால் இதிலுள்ள நகைச்சுவை என்னவென்றால் இப்போதும் இந்தியாவை எவ்வாறு கையாளுவது, அமெரிக்காவை எவ்வாறு கையாளுவது என்று சிலர் வகுப்பெடுத்துக் கொண்டிருப்பதுதான்.

கடந்த பதினாறு ஆண்டுகளாக இடம்பெற்ற அரசியல் உரையாடல்களை சற்று திரும்பிப் பார்த்தால், கோடம்பாக்க நகைச் சுவை நடிகர் வடிவேலு தோற்றுவிடுவார். அந்தளவிற்கு சர்வதேச அரசியல் தமிழர் பகுதிகளில் தெருவெங்கும் தலைவிரித்தாடியிருக்கின்றது. 2010 பொதுத் தேர்தலின் போது, அப்போது கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் திருகோணமலை நகரில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசுகின்றார், பிராந்திய வல்லரசான இந்தியா எங்களோடு இருக்கின்றது. உலக வல்லரசான அமெரிக்காவும் எங்களோடு இருக்கின்றது. சம்பந்தன் பொதுவாக பேசுவற்கு முன்னர் சபையை நன்றாக உற்றுநோக்கிக் கொள்வார். அதாவது, குறித்த சபையில் இருப்பவர்கள் அனைவரும் மடையர்களா அல்லது யாராவது விசயமுள்ளவர்கள் இருக்கின்றார்களா என்று பார்த்துக் கொள்வார். அந்தக் கூட்டத்திலும் அப்படித்தான் சம்பந்தன் பேசினார். அவர் அவ்வாறு கூறியபோது கரகோசம் எழுந்தது. சற்று எட்டத்திலிருந்து, இதனை கேட்டுக் கொண்டிருந்த எனக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை - சம்பந்தன் இவ்வாறு அடிக்கடி கூறுவதுண்டு. ஒரு முறை யாரோ ஒருவர், (வரதராஜப் பெருமாளாக இருக்க வேண்டும்) இந்தியா பின்னாலிருந்து முதுகா சொறிந்து கொண்டிருக்கின்றது என்று பேசியதாக ஒரு செய்தியை பார்த்த போதும் சிரிப்பு வந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழர் அரசியலில் வன் சக்தி மென் சக்தி பற்றிய உரையாடலொன்று இடம்பெற்றிருந்து, இதனை பலர் இப்போது மறந்துமிருக்கலாம். இதனை அப்போது கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுமந்திரன்தான் முதலில் உச்சரித்ததாக நினைவு. பின்னர் அது பற்றி ஆய்வுகள் வெளிவந்தன. இது பற்றி எழுதாவிட்டால் நமக்கு மரியாதையில்லையே என்னுமடிப்படையில், ஒரு கட்டுரையை நானும் எழுதியிருந்தேன். அந்தக் கட்டுரை வெளிந்த பின்னர் ஒரு ஆய்வாளர் தொடர்பு கொண்டு, நீங்கள் யாரோ ஒரு வெள்ளைக்காரணை மேற்கோள் காட்டி எழுதியிருக்கின்றீர்கள் - பரவாயில்லை நல்லா எழுதியிருக்கின்றீர்கள் என்றார். அப்போதுதான் எனக்கு ஒன்று விளங்கியது, இங்கு சர்வதேச அரசியல் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் எவருமே தங்களுக்கு வெளியில் என்ன நடக்கின்றது என்பதையே படிப்பதில்லை. ஏனெனில் இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், அந்த ஆய்வாளர் யாரோ ஒருவர் என்று கூறிய, அந்த வெள்ளைக்காரர்தான் மென்சக்தி என்னும் கோட்பாட்டையே உருவாக்கியவர். அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான பேராசிரியர் ஜோசப் சாமுவேல் நை 2004இல் எழுதிய மென்சக்தி (Soft Power: The Means To Success In World Politics) தொடர்பான நூலிலிருந்துதான், அமெரிக்க சிந்தனைக் கூடங்களின் மத்தியில் இது ஒரு உரையாடலானது. அமெரிக்காவின் மூன்று அரசாங்கங்களின் கீழ், ராஜாங்கத் திணைக்களத்தில் முக்கிய பொறுப்புக்களிலும் ஜோசப் நை இருந்திருக்கின்றார்.

இதிலுள்ள அடிப்படையான விடயம், வன் சக்தி, மென்சக்தி என்னும் உரையாடல் அரசுகளுக்குரியது. அதிலும் பலம் வாய்ந்த நாடுகளுக்குரியது. குறிப்பாக அமெரிக்காவின் நலன்களை இராணுவ வழிமுறைகளில் மட்டுமல்ல அதற்கு மாற்றாக மென்சக்தி அணுகுமுறைகளிலும் அடைய முயற்சிப்பது தொடர்பானது. ஜோசப் நையின் வார்த்தையில் கூறுவதானால், யுத்தத்தில் இராணும் வெல்லும் யுத்தமற்ற சூழலில் நமது உரையாடல்கள் வெல்லும் (வெல்ல வேண்டும்) பலம்பொருந்திய குறிப்பாக, அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் இது ஒரு முக்கிய உரையாடலாக இன்றும் இருக்கின்றது. சுமந்திரன் இந்த விடயங்களை அறிந்து பேசினாரா அல்லது யாரோ கூறக் கேட்டுப் பேசினாரோ நான் அறியேன் ஆனால் இப்போது திரும்பிப்பார்த்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருவதற்கே இன்னொரு நாட்டின் ஆசீர்வாதம் தேவைப்படுகின்ற நிலையில், நமது அரசியல் சமூகம், வன் சக்தி மென்சக்தி பற்றி உரையாடியதை எண்ணினால், சிரிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். ஒரு வகையில் சுமந்திரன் போன்றவர்கள் மென்சக்தியை அணுகும் ஆற்றலைக் கொண்டிருந்தால், சுமந்திரன் தென்னிலங்கையை நோக்கி முன்வைத்த அரசியல் உரையாடல் வெற்றிபெற்றிருக்க வேண்டுமல்லவா!

இது போன்றுதான் சுமந்திரன் தலைமையில் மூவர் அடங்கிய குழுவொன்று வோசிங்டன் சென்று திரும்பிய பின்னர் ஏற்பட்ட ஆர்பாட்டங்களும், அதன் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும் இப்போது திரும்பிப் பார்தால் சிரிக்க வேண்டும் போல் இருக்கின்றது. அந்த மூவரில் சுமந்திரன் தவிர்ந்த இருவர் ஏன் அந்தக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டனர் என்னும் கேள்விக்கு இன்றுவரையில் பதில் கிடைக்கவில்லை. ஏனெனில் அதன் பின்னர், குறித்த இருவரும் எங்கும் அதற்காக பணியாற்றியதாகத் தெரியவில்லை. குறித்த பயணத்தின் பின்னர், அமெரிக்கா கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறப்பட்டது - இதனை சுமந்திரன் இப்போது நினைத்துப் பார்ப்பாரோ தெரியவில்லை ஆனால் தங்களுடைய கூற்றுக்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி அரசியல்வாதிகள் எண்ணிப்பார்க்க வேண்டும், தங்களை அரசியல்ரீதியில் நிறுத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். அமெரிக்கா ஏன் ஈழத் தமிழர்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்? இந்த கேள்வியின் அடிப்படையில் சிந்தித்திருந்தால் அமெரிக்கா தொடர்பில் அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமிருக்காது. இதே போன்றுதான் செல்வம் அடைக்கலநாதன் யாரோ கூறியதைக் கேட்டு இந்தியப் பிரதமதர் மோடிக்கு கடிதம் எழுத முற்பட்டார். அது தவறான விடயம் அல்ல ஆனால் இறுதியில் தங்களுக்குள் மல்லுக்கட்டி, ஒருவாறு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது ஆனால் இந்தியத் பிரதமர் கடிதத்தை பார்ப்பதற்கு முன்னர், யாழ்ப்பாண பேருந்து தரிப்பிடத்தில் வெற்றிலை சம்பித்துப்பிக் கொண்டிருப்பர் அந்தக் கடித்தை படித்துவிட்டார். தமிழ் அரசியல்வாதிகள் ராஜதந்திர நடைமுறைகளில் ஞானசூனியங்கள் என்பதே இறுதியில் அம்பலமானது.

இவ்வாறான கதைகளின் அடிப்படையை நோக்கினால் ஒரு விடயம் தெளிவாகும். நம்மை நமக்குத் தெரியாமைதான், நமது பல அறியாமைகளுக்கு காரணமாகின்றது. தமிழர் அரசியல் ஜனநாயகவாதிகளால் கட்டுப்படுத்தப்பட்ட காலத்திலும் சரி, பின்னர், ஆயுதங்களால் கட்டுப்படுத்தப்பட்ட காலத்திலும் சரி - நாம் யார்? நமது ஆற்றலின் எல்லை எது? நாம் எவ்வாறானதொரு அயலக அரசியல் சூழலால் நிர்பந்திக்கப்பட்டிருக்கின்றோம்? (நிர்பந்தம் என்பது எப்போதுமே நமது விருப்பங்களுக்கு அப்பாற்றப்பட்டதுதான்). என்பதை புரிந்து கொண்டு செயற்படத் தவறியதன் விளைவே, இன்றைய நிலைமை. இன்றைய நிலைமைக்கு எவர் மீதும் விரல் நீட்ட முடியாது. ஒரு வேளை கட்டாயம் ஒருவர் மீது, விரல் நீட்டத்தான் வேண்டும் என்றால், நாம் நம் மீது மட்டும்தான் விரல் நீட்ட முடியும். நேற்றும் நமது நிலைமைக்கு நாம்தான் காரணம், இன்றும் நமது நிலமைக்கு நாம்தான் காரணம், நாளைக்கும் நாம்தான் காரணமாக இருப்போம்.




> இன்றைய நிலைமைக்கு எவர் மீதும் விரல் நீட்ட முடியாது. ஒரு வேளை கட்டாயம் ஒருவர் மீது, விரல் நீட்டத்தான் வேண்டும் என்றால், நாம் நம் மீது மட்டும்தான் விரல் நீட்ட முடியும். நேற்றும் நமது நிலைமைக்கு நாம்தான் காரணம், இன்றும் நமது நிலமைக்கு நாம்தான் காரணம், நாளைக் கும் நாம்தான் காரணமாக இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயப் போரும் ரெண்டுகால் பூச்சிகளும்!



நிலாந்தன்





> பிராந்தியத்தில், கண்டத்தில், பூகோளஅளவில் ஏற்படும் திருப்பகரமான மாற்றங்கள் ஈழத் தமிழர்களுக்கு புதியவாய்ப்புகளை திறக்கக்கூடும். சிலசமயம் இருக்கின்ற வாய்ப்புகளை மூடவும்கூடும். ஆனால் அவ்வாறு ஏற்படக்கூடிய மாற்றங்கள் ஈழத் தமிழ் அரசியலில், இலங்கை அரசியலில் என்னதான் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தினாலும், அவற்றைக் கையாள்வதற்கு ஈழத் தமிழர்கள் தயாராக இருக்கிறார்களா?

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கார்ல் மார்க்ஸ் சொன்னார் "மதம் ஓர் அபின்" என்று. கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ஹெபர்ட் மார்க்யூஸ் சொன்னார் "நுகர் வுப் பண்டங்களே அபின்" என்று. இந்த நூற்றாண்டில் தகவல் ஓர் அபினா?

சமூகவலைத்தள "அல்கோரிதம்" எனப்படுவது ஒருவகை போதை ஊக்குவிப்புத்தான். நீங்கள் எதை தேடுகிறீர்களோ அது உங்களைத் தேடிவரும். நீங்கள் எதைத் தேடுகிறீர்கள் என்றுகண்டு அதைநோக்கி உங்களை ஊக்குவிப்பது. ஒரு போதைப்பொருள் பாவனையாளர் எந்தப் போதைக்குப் பழக்கப்படுகிறாரோ, அதே போதையை அவருக்குத் தொடர்ந்து ஊட்டுவதன் மூலம் அவரை அதற்கு அடிமையாக்கிவிடுவது. அதாவது இலத்திரனியல் அடிமைகள். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் உலகளாவிய பரந்த மாய வலைப் பின்னலுக்குள் சிக்கியரெண்டுகால் பூச்சிகள்.

தகவல் ஒருபோதை மட்டும் அல்ல. கவிஞரும் திசை வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவருமாகிய மு.பொன்னம்பலம் கூறுவார் "தகவல் ஒருமாயை" என்று. செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சியோடு அது இப்பொழுது மகாமாயையாக உருவெடுத்துவிட்டது. தகவல் புரட்சியின் ரெண்டுகால் பூச்சிகள் ஒரே சமயத்தில் மாயப் போரின் பலியாடுகளாகவும் இருக்கிறார்கள். பரிசோதனைக் கூட எலிகளாகவும் இருக்கிறார்கள்.தம்வசமிழந்த பார்வையாளர்களாகவும் இருக்கிறார்கள்.

இஸ்ரேல் அண்மை ஆண்டுகளாக ஈரானிய தலைவர்கள் தளபதிகள் விஞ்ஞானிகளுக்கு எதிராக முன்னெடுத்துவரும் தாக்குதல்கள் பெருமளவுக்கு மாயத் தொழில்நுட்ப வகைப்பட்டவைதான். இப்பொழுதும் மேற்காசியாவில் திறக்கப்பட்டிருக்கும் போர்க்களத்தில் செயற்கை நுண்ணறிவின் பங்குபெரியது. அந்தமாயப் போர்க்களத்தில் அதிகம் பலியாவது ஆசியர்கள்தான். மேற்குநாடுகள் தங்களுடைய நவீனதொழில்நுட்பத் திறன்களையும் புதியபோர்த் தளபாடங்களையும் கண்டுபிடிப்புகளையும் பரிசோதனை செய்யும் ஆய்வுக்கூடங்கள் பெருமளவுக்கு ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க, கிழக்கு ஐரோப்பியப் போர்க்களங்கள்தான். மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும் அனேகமாகப் பாதுகாப்பாக இருக்கும். ஏனைய பகுதிகள்தான் புதிய யுத்தத் தளபாடங்களின் பரிசோதனைக் கூடங்களாகப் பயன்படுத்தப்படும். குறிப்பாக உலகப் பேரரசு அமெரிக்கா எல்லா யுத்தஅரங்குகளுக்கும் வெளியே, தொலைவில் பத்திரமாக இருக்கிறது. ஒசாமா பின் லேடன்தான் அமெரிக்காவை அதன் வாசற்படிவரை சென்று தாக்கினார்.

அணுகுண்டை தூய விஞ்ஞானத்தின் வார்த்தைகளில் சொன்னால் அது ஒரு யூதக் குண்டு. அதற்குரிய சமன்பாட்டை கண்டுபிடித்தது யூதரான ஐன்ஸ்டீன். அதனை ஒரு செய்முறையாக மாற்றியவர் யூதராகிய ஓபன் ஹெய்மர். அதனால் பிரயோக விஞ்ஞானத்தின் அடிப்படையில் கூறினால் அதுமுதலில் அமெரிக்க யூதக் குண்டு.ஆனால் அதைஅவர்கள் பரிசோதித்த இடம் ஆசிய ஜப்பானில் தான். அணுகுண்டின் முதலாவது பரிசோதனைக் கூட எலிகள் ஆசியர்கள்தான். இப்பொழுது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் உதவியோடு முன்னெடுக்கப்படும் மாயப் போரிலும் முதல் பலிகளும் பரிசோதனை கூட எலிகளும் பெருமளவுக்குஆசிரியர்களும் ஆபிரிக்கர்களும் உக்ரேனியர்களும்தான்.ஆளில்லா விமானங்களின் மாயத் தாக்குதல்கள் அதிகம் நடந்த இடங்கள் ஆசிய, ஆப்பிரிக்க, கிழக்கு ஐரோப்பியப் பிராந்தியங்கள் தான்.

மூன்றாவது உலகப்போர் என்று ஒன்று இதுவரை நடக்கவில்லை. ஆனால் பனிப் போர் நடந்தது. அந்தப் பனிப் போரானது மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு நிழல் போராக இருந்தது.ஆனால் ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க பிராந்தியங்களில் நிஜப் போராக இருந்தது. பேரரசுகளின் நிழல் போரை ஏனைய நாடுகள் நிஜப் போராகமுன்னெடுத்தன. ஈழப்போரும் அப்படித்தான். ஜெயவர்த்தனாஅமெரிக்காவின் நண்பனாக இருந்தார். இந்தியா, ரஸ்சியாவின் கூட்டாளியாக இருந்தது. 1983க்குப் பின் ஈழப் போர் எனப்படுவது பனிப்போரின் ஒருபகுதியாக மாறியது. அதனாலேயே வளர்ந்தது. ஆசியர்களாகிய சிங்களவர்களும் ஆசியர்களாகிய தமிழர்களும் ஐரோப்பியர்களின் நிழல்போரை நிஜப்போராக முன்னெடுத்தார்கள்.

ஆசியர்களாகிய, அரசில்லாத, சிறிய ஈழத் தமிழர்கள் ஆயுதமோதல்கள் முடிவுக்கு வந்தபின்னரும் உசார் மனோ நிலையிலிருந்தும் தற்காப்பு உணர்விலிருந்து விடுபடவில்லை. அதனால்தான் மேற்காசியாவில் போர் வெடித்தபோது யாழ்ப்பாணத்தில் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கு மாகவரிசைகள் நின்றன. அதைப் பலரும் நக்கல் அடித்தார்கள். ஆனால் அது யாழ்ப்பாணத்து நோக்கு நிலையில் தவிர்க்கமுடியாதது.

ஒரு குடாநாட்டு மனோநிலை அப்படித்தான் இருக்கும். யாழ்ப்பாணத்தவர்களின் தற்காப்பு உணர்வின் விளைவுதான் சேமிப்புபண்பாடு. அது குடாநாட்டு மனோநிலையின் பிரதானஅம்சம். போர் இந்த சேமிப்பு பண்பாட்டைமேலும் பலப்படுத்தியது. ஒருவகையில் போருக்குள் நின்று நிலைத்தமைக்கு அதுவும் காரணம்.

போருக்குப் பின்னரும் அந்தமனோநிலைஅப்படியேமாறாமல் இருக்கிறது. ஏனென்றால் இனப்பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கவில்லை. அதனால் யாழ்ப்பாணத்தவர்களின் மனோநிலை மட்டுமல்ல முழு ஈழத் தமிழர்களின் மனோநிலையும் ஒருவிதத்தில் அமைதியுறாத, கொந்தளித்த, "அண்செற்றில்ட்" மனோநிலையாகத்தான் காணப்படுகிறது. சதா உஷாராகவும், அளவுக்குமிஞ்சிய தற்காப்பு உணர்வோடும் காணப்படுகிறது. எனினும் மேற்காசியாவில் யுத்தம் வெடித்த உடனே வரிசையில் நின்றபலரும் இப்பொழுது தாங்கள் செய்தது சரிதான் என்று திருப்திப்படுகிறார்கள். ஒரு சிறிய மக்கள் கூட்டம் தற்காப்பு உணர்வோடு இருப்பதில், முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வதில் தவறில்லை.

சில ஆண்டுகளுக்குமுன் ஒரு ராஜதந்திரி என்னிடம் கேட்டார் யாழ்ப்பாணத்தை "ஒரு தூங்காநகரமாக மாற்ற முடியுமா?" என்று. யாழ்ப்பாணம் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் பல நகரங்கள் இரவு கிட்டத்தட்ட எட்டுமணிக்கு பின் தூங்கும் நகரங்கள்தான். விசேஷமாக வடக்கு கிழக்கில் உள்ள நகரங்கள் அதிகாலையில் சூரியனோடு சேர்ந்து விழித்தெழுவதில்லை.இரவானதும் ஒன்பது மணிக்கு முன்னரே பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டுவிடும். அதற்குக் காரணம் தமிழ் மக்களின் கூட்டு உளவியலில் ஒருவித "உளவியல் ஊரடங்குச் சட்டம்" தொடர்ந்தும் அமுலில் இருப்பது தான் என்று எனது நண்பன் ஒருவர் கூறுவார்.

இந்த "உளவியல் ஊரடங்குச் சட்டம்" என்பது முன் சொன்னதுபோல அண்செற்றில்ட்டான ஒரு கூட்டு உளவிகளின் விளைவு. இனப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்காதவரை அது தொடர்ந்தும் இருக்கும். 2009க்குப் பின்னரான தொடர்ச்சியான புலப்பெயர்ச்சிக்கு அதுவும் ஒரு பிரதான காரணம்.

அரசில்லாத சிறிய,ஆசியமக்கள் கூட்டம் ஆகிய ஈழத் தமிழர்கள் மேற்காசியப் போரில் நேரடியாகச் சம்பந்தப்படவில்லை. ஆனால் அமெரிக்காபோரை இலங்கை கடற்கரையில் இருந்து 19 கடல் மைல் வரை கொண்டுவந்துவிட்டது. ஈரானியப் போர்க்கப்பல் அமெரிக்க நீர் மூழ்கியால் தாக்கப்பட்டது. எனவே இலங்கை போர்க்களத்துக்கு வெளியே இருக்கிறது என்று கூறமுடியாது. மேலும் எரிவாயுவுக்கும் எரிபொருளுக்குமாக வரிசையில் நிற்கும் ஒருநிலை வந்திருக்கிறது. புதன்கிழமை விடுமுறையாக்கப்பட்டிருக்கிறது. அதாவது போர் நமது குசினி, அலுவலகம், பாடசாலை வரை வந்துவிட்டது.

அமெரிக்கா எதிர்பார்த்ததுபோல ஈரான் துவண்டுவிடவில்லை. தலையை நசுக்கினால் பாம்பு செத்துவிடும் என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் நம்பியிருக்கலாம். ஆனால் ஈரான் நின்றுபிடிக்கின்றது. இந்தப் போரில் சீனாவும் ரஷ்யாவும் நேரடியாக போர்க்களத்தில் இறங்கவில்லை. ஆனால் ஈரானின் பின்னணிப்பலம் அந்தநாடுகள்தான். நிகழும் போரில் சீனா ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளினதும் பங்களிப்பின் அளவும் பங்களிப்பின் தன்மையும்தான் புதிய உலகவலுச் சமநிலையைத் தீர்மானிக்கும்.


அவ்வாறு உலக வலுச் சமநிலையில் ஏற்படும் தளம்பல்கள் சிறிய ஈழத் தமிழர்களின் அரசியலிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். பனிப்போர் எப்படி ஈழப் போரில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியதோ அப்படி. கடந்த 16 ஆண்டுகாலமாக சீனாவுக்கு எதிரான மேற்கத்திய வியூகத்தின் ஒருபகுதியாக ஈழத் தமிழர்கள் ஐநாவில் கையாளப்படுவதையும் அவ்வாறுதான் விளங்கிக் கொள்ளவேண்டும்.

எனவே பிராந்தியத்தில், கண்டத்தில், பூகோளஅளவில் ஏற்படும் திருப்பகரமான மாற்றங்கள் ஈழத் தமிழர்களுக்கு புதிய வாய்ப்புகளை திறக்கக்கூடும். சில சமயம் இருக்கின்ற வாய்ப்புகளை மூடவும் கூடும்.

ஆனால் அவ்வாறு ஏற்படக் கூடிய மாற்றங்கள் ஈழத் தமிழ் அரசியலில், இலங்கை அரசியலில் என்னதான் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தினாலும், அவற்றைக் கையாள்வதற்கு ஈழத் தமிழர்கள் தயாராக இருக்கிறார்களா ? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத்தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் அண்மைய அறிவிப்பும் அதன் பின்னாலுள்ள உண்மைகளும்!



- கந்தையா
அருந்தவபாலன்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த பின் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக இடைக்கிடை வெளிவரும் அமைச்சர்களின் கருத்துகளும் அறிக்கைகளும் மறைந்த நகைச்சுவை நடிகர் என்னத்தே கன்னையாவின் 'வரும் ஆனா வராது' என்ற வசனத்தை நினைவுபடுத்தத் தவறுவதில்லை. அந்தவகையில் அத்தேர்தல் தொடர்பாக அண்மையில் வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. மாகாணசபைத் தேர்தல் முறைமை பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முதலாவது கூட்டம் நடைபெறுவதற்கு இரு நாட்கள் முன்னதாக இவ்வறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. இந்நேரத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டதன் நோக்கங்கள், அறிக்கையில் கூறப்படும் விடயங்களின் சாத்தியத்தன்மை, தேர்தல் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு போன்றவற்றை நோக்குவது இப்பத்தியின் நோக்கமாகும்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக ஏன் வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிடவேண்டும்? அரசாங்கத்தின் தீர்மானமாயின் அதன் ஊடகப் பேச்சாளர் கூறவேண்டும். அல்லது உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு கூறவேண்டும். அல்லது தேர்தல் ஆணையம் கூறவேண்டும். இதைவிடுத்து வெளிநாட்டமைச்சு கூறுகிறது என்றால் அதற்கு சில தேவைகள் இருந்திருக்கலாம். ஒன்று மாகாணசபைத் தேர்தல் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் என்ற வகையில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அக்குழு உறுப்பினர்களுக்கு மறைமுகமாக ஒருசெய்தியைச் சொல்லி மடைமாற்ற விரும்பியிருக்கலாம். இரண்டாவது இந்த ஆண்டுடன் முடியவிருக்கும் ஜி.எஸ்.பி வரிச்சலுகையையும் செப்ரம்பர் மாதத்தில் நடக்கவிருக்கும் ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரையும் கருத்திற்கொண்டு சர்வதேசத்திற்கான ஒரு செய்தியாகக் கூறியிருக்கலாம். இவற்றிற்கு மேலாக தற்போது தொடர்ந்து அரசாங்கத்தைக் குறைகூறிவரும் எதிர்க்கட்சிகளை தேர்தல் முனைப்புகளை நோக்கித் திசைதிருப்புவதாகவும் இருக்கலாம். எதிர்க்கட்சிகளை மட்டுமல்ல தமது ஆதரவாளர்களையும் குறிப்பாக அண்மைக்காலத்தில் புதிதாக தேசிய மக்கள் சக்தியில் சேர்ந்து கொண்டவர்களை மக்கள் பணிகளில் தீவிரமாக ஈடுபடச் செய்வதற்கான தூண்டுதலாகவும்கூட இருக்கலாம்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான குறித்த அறிக்கையில் சொல்லப்பட்ட முக்கிய விடயங்கள் மூன்று. ஒன்று இந்த ஆண்டு இறுதியில் மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெறும். இரண்டாவது இந்தத் தேர்தல் எந்தமுறையில் நடத்துவதென்று ஜூன் மாதம் அறிவிக்கப்படும். மூன்றாவது இந்தத் தேர்தலில் வெளிநாட்டிலுள்ள இலங்கையருக்கும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இந்த மூன்று விடயங்களும் தர்க்கரீதியாக நோக்கும்போது அவற்றுக்கிடையிலான முரண்பாடுகளையும் சாத்தியமற்ற தன்மையையும் அறிய முடியும். இத்தேர்தல் எந்த முறையில் நடக்கும் என்பதை ஜூன் மாதம் அறிவிக்கப்படும் என்பது உண்மையாக அமையும். ஏனெனில் தற்போது இத்தேர்தல்முறை தொடர்பாக ஆராயப்படும் பாராளுமன்றத் தெரிவுக்குழு அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டிய காலக்கெடு ஜூன் மாதமாகும். அக்காலக்கெடு நீடிப்பதற்கான வாய்ப்பையும் மறுக்கமுடியாது. ஆனால் அந்த முறை எது என்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை. அந்தமுறையாகத் தற்போதுள்ள விகிதாசார முறையில் தேர்தல் நடத்துவது என அத்தெரிவுக்குழு தீமானித்தால் மட்டுமே இவ்வாண்டில் நடத்துவதற்கான நிலைமை ஏற்படும். மாறாக புதிய கலப்புமுறையில் நடத்தவேண்டும் எனத்தீர்மானித்தால் இவ்வாண்டில் மட்டுமல்ல அடுத்த ஆண்டில்கூட நடத்தமுடியுமா என்பது கேள்விக்குறியாகும். அதற்கு மேலாக புலம்பெயர் இலங்கையருக்கும் இத்தேர்தலில் வாக்களிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது என்பதும் குறுகியகாலத்தில் சாத்தியமாகாது. எனவே எந்த முறை என்பது உண்மையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இதனால் இந்த அறிக்கை தொடர்பாக ஐயங்கள் எழுகின்றன.

இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதே இங்கு முக்கியமாக நோக்கப்படவேண்டும். மாகாணசபைகள் தொடர்பான அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு ஜே.வி.பியின் மாகாணசபை தொடர்பான தொடக்ககால நிலைப்பாட்டிலிருப்பதாகவே தென்படுகிறது. மாகாணசபைகள் தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு மிகத் தெளிவானது. எனினும் தேர்தல் வெற்றிக்காக மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவோம் என்று அவர்கள் வாக்குறுதியளித்திருந்தார்கள். அதுமட்டுமன்றி அமோக வெற்றிபெற்று ஆட்சியமைத்த பின்னரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைத் தொடர்ந்து மாகாணசபைகளுக்கான தேர்தல்களையும் நடத்துவதற்கு ஓரளவு மனங்கொண்டிருந்தனர் என்பதும் உண்மை. இந்தியாவின் நட்பைப் பலப்படுத்தும் நோக்கமும் அதற்கான இன்னொரு முக்கிய காரணியாக அவர்களால் பார்க்கப்பட்டது. எனினும் அரசாங்கம் எதிர்பார்த்ததுபோல மாகாணசபைகள் பற்றிய எந்தவித நெருக்குதல்கள் இல்லாமலே அவர்களால் இந்தியாவின் நட்பைப் பலப்படுத்த முடிந்தது. இதனால் மாகாணசபை தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானம் அதன்பழைய நிலைப்பாட்டுக்குத் திரும்பிவிட்டது.

கடந்த ஆண்டே ஜே.வி.பியின் உயர்மட்டத் தலைவர்கள் கூடிய கூட்டத்தில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில்லை என்ற உறுதியான தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டது. அதன்பின்னர் அத்தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்படத்தொடங்கிவிட்டது. தேர்தலை நடத்தாமல் அதேவேளை தேர்தலை நடத்துவது போல வெளிப்படுத்திக் காலத்தைக் கடத்துவதே அரசாங்கத்தின் தற்போதைய அந்த அணுகுமுறை. இந்த இடத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளின் சூத்திரதாரியான ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணத்தின் பின்னரான கருத்துக்கள் முக்கியமானவை. புதிய அரசியல் அமைப்பு வரும்வரை மாகாணசபை முறைமை இருக்கும் என்று அவர் கூறியுள்ளதுடன் எப்போது தேர்தல் என்ற கேள்விக்கு புதியமுறையில் எல்லைகளை வரையறுப்பதுபற்றி கவனஞ்செலுத்தவேண்டியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். அதேவேளை அவரின் இந்தியத் தலைவர்களுடனான குறிப்பாக இந்திய வெளிநாட்டு விவகாரங்களுக்கான அமைச்சர் ஜெய்சங்கருடனான முக்கிய கலந்துரையாடலில் இதுதொடர்பான விடயத்துக்கு முக்கியமளிக்கப்படவில்லை என்பதை இருநாட்டுச் செய்திகளும் உறுதிப்படுத்தியிருந்தமையையும் இங்கு முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாகாணசபைகள் பற்றிய தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு ஒரு கல்லில் இருமாங்காய்களைப் பறிப்பதைப் போன்றது. ஒன்று மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்வதனால் ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகளைத் தவிர்ப்பது. அதற்கு அம்முறைமையைத் தொடர்ந்து பேணுவது. இரண்டாவது எதிர்க்கட்சிகளின் வளர்ச்சியைத் தடுப்பது. அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் மீண்டும் தமிழ்க் கட்சிகளின் எழுச்சி பெறுவதைத் தடுத்து ஏலவே தமிழ் மக்களிடையே தாம் பெற்றுள்ள ஆதரவை தக்கவைப்பது அல்லது மேலும் வளர்ப்பது. இதற்கான அணுகுமுறை தேர்தலை நடத்தாது ஆளுநர்கள் மூலமும் தமது கட்சி உறுப்பினர்கள் மூலமும் மாகாணங்களின் நிர்வாகங்களைத் தமக்கு இசைவானமுறையில் வழிநடத்திச் செல்வதாகும். இவ்விரு நோக்கங்களையும் சவால்களின்றி நிறவேற்றுவதற்கான உத்தியே இவ்வாறு தேர்தல் நடைபெறப் போகிறது என்ற தோற்றப்பாட்டைத் தக்கவைப்பதற்கான வெளிப்பாடுகள் எனலாம்.

இதுபோன்ற சில வெளிப்பாடுகளே, வரவு செலவுத்திட்டத்தில் மாகாணசபைகளுக்கான தேர்தலுக்கு நிதியை ஒதுக்கிவிட்டு, நான் தயார் அதற்கான ஏற்பாட்டை பாராளுமன்றமும் தேர்தல் திணைக்களமுமே எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி பந்தை மற்றத்தரப்புக்கு எறிந்த செயற்பாடும், அதன்பின்னர் அதற்காகப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை உருவாக்கியமையும் ஆகும். இந்தப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் உருவாக்கமும் அதன்பின் அரசாங்கம் செயற்பட்டுவரும் விதமும் ஆட்சியாளரின் நோக்கத்தை மேலும் உறுதிப்படுத்துவதை அவதானிக்க முடியும். அதில் முதலாவதாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பாராளுமன்றத் தெரிவுக்குழு அவசியமானதொன்றல்ல. இதில் இருக்கின்ற முக்கிய தடை 2019இல் உச்சநீதிமன்றம் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக வழங்கிய ஒரு தீர்ப்பாகும். மாகாணசபைகளுக்கான தேர்தல் தொடர்பான அடிப்படை உரிமை வழக்கொன்றில் தொகுதிகளுக்கான எல்லைகள் மீளமைக்கப்படாது தேர்தல் நடத்தப்படமுடியாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. இத்தீர்ப்பானது ரணில் மைத்திரி ஆட்சிக்காலத்தில் மாகாணசபைத் தேர்தலைத் தள்ளிவைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பாகும். அந்தச் சட்ட வேற்பாடுகளுக்கு மாற்றத்தைக் கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் தீர்ப்பை வலுவிழக்கச் செய்ய முடியும். இந்த அரசாங்கத்துக்குப் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டுக்கு மேற்பட்ட பலம் இருப்பது மட்டுமன்றி எதிர்க்கட்சிகளின் ஒட்டுமொத்த ஆதரவும் இதற்கு உள்ளதால் அதற்குத் தேவையான சட்டத்தை பாராளுமன்றில் ஒருமனதாக நிறைவேற்றிக் கொள்வதில் எவ்வித தடைகளும் இருக்கப் போவதில்லை. அவ்வாறிருக்கையில் அதுபற்றி ஆராய்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைக்கவேண்டிய அவசியந்தான் என்ன?

பாராளுமன்றத் தெருவுக்குழுவை அமைத்த செயற்பாடுகளிலும் காலத்தைக் கடத்தும் நோக்கம் தெளிவாகவே தெரிந்தது. அதற்கான பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதில் தாமதம் பின்னர் எதிர்க்கட்சிகள் அக்குழுவுக்கான தமது உறுப்பினர்களை உடனடியாக முன்மொழிந்து விட்டபோதிலும் அரசாங்க உறுப்பினர்களை நியமிப்பதில் ஏற்படுத்தப்பட்ட தாமதம், அதன்பின்னர் அக்குழுவின் கூட்டத்தைக் கூட்டுவதில் ஏற்பட்ட தாமதம் என தாமதங்கள் நீண்டு சென்றதைக் காணமுடியும். இத்தாமதங்களின் பின் கூடிய கூட்டத்திலும் மேலும் தாமதத்திற்கான தீர்மானமே எடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் எதிர்கட்சிகளின் அனைத்து உறுப்பினர்களும் ஏலவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணைகளின் மூலம் முன்னையை சட்டத்தை வலுவிழக்கச் செய்து பழையமுறையில் தேர்தலை நடத்த


> **ரணில் தனது அரசியல் தேவைகளுக்காக அத்தேர்தலை ஒத்திவைப்பதற்கு புதிய தேர்தல் முறை என்று காய்நகர்த்தியபோது அதேமாதிரி அவ்வாட்சிக்காலத்தில் எதிர்க்கட்சி என்ற பெயரில் ஆளுங்கட்சியாகச் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அந்நேரத்தில் அவ்வாறான ஒரு தேவையிருந்தமையினால் அவர்களும் ரணிலுக்கு ஒத்தூத கனகச்சிதமாக அதற்கான தடை ஏற்படுத்தப்பட்டது.**

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கின் வரலாற்று பகை:

ஐங்கரன் விக்கினேஸ்வரா





மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் மேகங்கள் இப்போது இடி முழக்கங்களாக மாறியுள்ளன. 'ஆபரேஷன் எபிக் ஃபியூரி' என்ற பெயரில் அமெரிக்காவும், 'ரோரிங் லயன்" என்ற பெயரில் இஸ்ரேலும் இணைந்து ஈரானின் அணுசக்தி மையங்கள் மற்றும் ராணுவ நிலைகளைத் தாக்கி அழித்து வருகின்றன. முதல் நாள் தாக்குதலிலேயே ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார்.

போர் தொடங்கியதிலிருந்து உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெய் விநியோகம் நடைபெறும் ஹார்முஸ் நீரிணையின் போக்குவரத்தை ஈரான் தொடர்ந்து கட்டுப்படுத்தி கண்காணித்து வருகிறது. ஈரானின் அச்சுறுத்தல் நீடித்தால் வளைகுடா நாடுகளின் பொருளாதாரம் முற்றாகச் சிதைந்துவிடும் என்ற அச்சம் தற்போது எழுந்துள்ளது.

ஹர்மூஸ் நீரிணை ஈரானின் ஆளுகை யில் உள்ளவரை வளைகுடாவில் உள்ள அமெரிக்க ஆதரவு அரபு நாடுகளால் ஈரானுக்கு எதிராக தாக்குப் பிடிக்கவே முடியாது. ஹர்மூஸ் நீரிணை என் பது ஈரானுக்கு ஆயிரம் அணு குண்டுகளின் பலத்தை விட பலமடங்கு ஆபத்தான ஆயுதமாகும்.

இன்று அரேபிய வளைகுடாவில் உள்ள எந்த ஒரு நாட்டுக்கும் எந்த பாதுகாப்பும் இல்லை. அமெரிக்க பாதுகாப்பை நம்பி இருந்த நாடுகள் அனைத்தும் பாரிய தாக்குதல்களை எதிர்கொண்டு நிற்கும் நாடுகளாகவே உள்ளது. எவ்வளவு தான் இந்த வளைகுடா நாடுகளில் எல்லாம் கச்சா எண்ணெய் பெற்றோலியம் எரிவாயு என நிரம்பி இருந்த போதிலும் அது உலக சந்தைக்கு செல்ல வேண்டுமானால் ஈரானை கடந்துதான் போக வேண்டும். இல்லையேல் அவர்கள் உற்பத்தியை நிறுத்தியே ஆக வேண்டும் என்ற நிலை உள்ளது.

**அரபு நாடுகள் ஏன் இலக்காகின?**

கட்டரில் அல் உதைட் விமான தளம் அமெரிக்காவின் மத்திய கிழக்கிற்கான பிரதான தளமாக அமைந்துள்ளது. மேலும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் (டுபாய் - அபுதாபி) அல் தஃப்ரா தளம் உள்ளது. பஹ்ரைன் நாட்டில் அமெரிக்காவின் 5-வது கடற்படைத் தலைமையகம் அமைந்துள்ளது.

டுபாய், அபுதாபி, கத்தார் போன்ற நாடுகள் ஈரானுடன் நேரடியாகப் போரிடவில்லை. இருப்பினும் இந்த நாடுகளின் மீது ஈரான் தாக்குதல் நடத்தி உள்ளது. இந்த நாடுகளில் அமெரிக்காவின் மிகப்பெரிய ராணுவத் தளங்கள் உள்ளன என்பதே முக்கிய காரணமாகும்.

தங்கள் மீதான தாக்குதலுக்கு இந்தத் தளங்களே காரணம் என ஈரான் குற்றம் சாட்டி வருகிறது. ஈரான் மீது தாக்குதல் நடத்த உங்கள் மண்ணைப் பயன்படுத்த அனுமதித்தால், நீங்களும் எதிரிகளே என்ற ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. இப்போது ஈரான் ஏவுகணைகள் பலவும் டுபாயின் பாம் ஜுமேரா மற்றும் அபுதாபி துறைமுகங்கள் அருகே விழுந்து வெடித்துள்ளன.

**போரை அவசரமாக முடிக்க வேண்டாம்:**



அதேவேளை ஈரான் மீதான போரை அவசரமாக முடிக்க வேண்டாம் என அமெரிக்காவிற்கு வளைகுடா நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையிலான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஹார்முஸ் நீரிணை மற்றும் வளைகுடா நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பில் அமெரிக்காவிற்கும் அரபு நாடுகளுக்கும் இடையே சிக்கலான இராஜதந்திரப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

வளைகுடா நாடுகளின் எண்ணெய் விநியோகக் கட்டமைப்புகள் மற்றும் பொருளாதார உயிர்நாடிகள் மீது ஈரான் தொடர்ந்து அச்சுறுத்தல் தாக்குதல் தொடுத்து வருவதால், இந்தப் பிரச்சினையை அரைகுறையாக விட்டுவிடக் கூடாது என அரபு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.


அமெரிக்காவை ஈரானுடன் போருக்குச் செல்லுமாறு வளைகுடா நாடுகள் நேரடியாகக் கோரவில்லை. இருப்பினும், ஈரானின் அச்சுறுத்தல் முழுமையாக நீக்கப்படாமல் போரை அவசரமாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டாம் என அவை வலியுறுத்துகின்றன.

மேலும் ஈரானுக்கு எதிரான போரில் வளைகுடா நாடுகளும் நேரடியாக இணைய வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருவதாக அரேபிய இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். ஆறு வளைகுடா நாடுகளின் விமான நிலையங்கள், துறைமுகங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் வர்த்தக மையங்களை ஈரான் ஏற்கனவே ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்கியுள்ளது.

ஈரானின் அச்சுறுத்தல் நீடித்தால் வளைகுடா நாடுகளின் பொருளாதாரம் முற்றாகச் சிதைந்துவிடும் என்ற அச்சம் காரணமாகவே, ஈரானின் இராணுவ பலத்தை முழுமையாகக் குறைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த அரபு நாடுகள் விரும்புகின்றன. உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெய் விநியோகம் நடைபெறும் ஹார்முஸ் நீரிணையின் போக்குவரத்தை ஈரான் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

## அரபு நாடுகளுடன் முரண்படும் ஈரான்!



அரேபிய வளைகுடாவில் உள்ள எந்த ஒரு நாட்டுக்கும் எந்த பாதுகாப்பும் இல்லை. அமெரிக்க பாதுகாப்பை நம்பி இருந்த நாடுகள் அனைத்தும் பாரிய தாக்குதல்களை எதிர்கொண்டு நிற்கும் நாடுகளாகவே உள்ளது. எவ்வளவு தான் இந்த வளைகுடா நாடுகளில் எல்லாம் கச்சா எண்ணெய் பெற்றோலியம் எரிவாயு என நிரம்பி இருந்த போதிலும் அது உலக சந்தைக்கு செல்ல வேண்டுமானால் ஈரானை கடந்துதான் போக வேண்டும்.

நீடிக்கும் இந்த யுத்தத்தில் அமெரிக்காவின் கைகள் ஓங்கி இருந்திருந்தால் இந்த நேரம் இந்த அரபு நாடுகளான அத்தனை நாடுகளும் ஈரானை தாக்கி அழிக்க அமெரிக்காவை விட முன்னே நின்று இருப்பார்கள் என்பதே உண்மையாகும்.

**வளைகுடாவில் எரிசக்திப் போர்:**

இரு தினங்களுக்கு முன்னர் கட்டார் எரிசக்தித் தளங்கள் மீது ஈரான் பாரிய தாக்குதல் நடத்தியுள்ளது. மத்திய கிழக்கின் போர் தற்போது ஒரு முழுமையான எரிசக்திப் போராக உருவெடுத்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் மிக முக்கியமான எரிவாயுத் தளங்களை இலக்கு வைத்து ஈரான் நடத்தும் தாக்குதல்களை ஒரு அபாயகரமான விரிவாக்கம் என ஐக்கிய அரபு இராச்சியம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இதேவேளை சவுதி, ஓமான் உள்ளிட்ட நாடுகளில் எண்ணெய் சேமிப்பு நிலையங்கள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரானின் ஏவுகணை தாக்குதலில் ஐக்கிய அரபு இராச்சிய எரிவாயு உற்பத்தி முடக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஹப்ஷான் எரிவாயு நிலையம் மற்றும் பாப் எரிவாயு வயல் ஆகியவற்றின் மீது ஈரானிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் இடைமறிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தத் தளங்களில் எரிவாயு உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அபுதாபி அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

அத்துடன் கட்டார் மற்றும் சவுதி மீதான தாக்குதல்களால் பாரிய சேதங்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. கட்டாருக்கும் ஈரானுக்கும் பொதுவான பாரசீக வளைகுடாவில் அமைந்துள்ள ஈரானின் 'சவுத் பார்ஸ்' கடலோர இயற்கை எரிவாயு வயல் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து பாரிய தாக்குதலை முன்னெடுத்திருந்தன. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே, கட்டாரில் உள்ள எரிவாயுத் தளங்கள் மீதும் ஈரான் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

அதேவேளை, தமது நாட்டின் இயற்கை எரிவாயுத் தளங்களைக் குறிவைத்து இரவு முழுவதும் ஈரான் ஏவிய ட்ரோன்களைத் தமது வான்பாதுகாப்பு அமைப்புகள் சுட்டு வீழ்த்தியுள்ளதாக சவுதி அரேபியாவும் தெரிவித்துள்ளது. அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய நடவடிக்கைகளுக்கு அரபு நாடுகள் துணைபோவதாகக் கருதியே ஈரான் இந்த அதிரடித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளமை சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயுச் சந்தையில் பாரிய பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**நிழல் யுத்த அதிகாரப் போட்டி**

இன்றைய நிலையில் வளைகுடா நாடுகளின் தர்மசங்கடமான நிலை தொடர்கிறது. வளைகுடா நாடுகள் இப்போது இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கின்றன. ஒருபுறம் பாதுகாப்புக்காக அமெரிக்காவை நம்பியிருக்க வேண்டிய சூழல், மறுபுறம் அமெரிக்காவுக்கு இடம் கொடுத்தால் பக்கத்து நாடான ஈரானின் ஏவுகணைகளுக்குப் பலியாக வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

டுபாயில் நடந்த தாக்குதல்கள் உலகப் பொருளாதாரத்தையே உலுக்கியுள்ளன. மசகு எண்ணெய் விலை உயர்வு முதல் சர்வதேச விமானப் போக்குவரத்து இரத்து வரை போர் இப்போது ஒவ்வொரு நாட்டின் கதவையும் தட்டத் தொடங்கிவிட்டது.

1400 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய ஒரு தலைமைப் போட்டி, இன்று நவீன ஏவுகணைகளாக உருவெடுத்து மத்திய கிழக்கின் அமைதியைப் புதைத்து வருகிறது. இது வெறும் மதம் சார்ந்தது மட்டுமல்ல. யார் இந்தப் பிராந்தியத்தின் தலைவர் என்பதில் சுனி தலைமையிலான சவுதி அரேபியாவுக்கும், ஷியா தலைமையிலான ஈரானுக்கும் இடையே நடக்கும் நிழல் யுத்தம் இன்னும் தொடர்கிறது.

ஈரான் தனது செல்வாக்கை அதிகரிக்க லெபனானில் ஹிஸ்புல்லா, ஏமனில் ஹூதிகள் போன்ற ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு அளிக்கிறது. இது சவுதி போன்ற நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. முன்பெல்லாம் அனைத்து அரபு நாடுகளும் இஸ்ரேலை எதிரியாகப் பார்த்தன. ஆனால், ஈரானின் அச்சுறுத்தல் அதிகரித்ததால், எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் பஹ்ரைன் போன்ற நாடுகள் ஆபிரகாம் உடன்படிக்கை மூலம் இஸ்ரேலுடன் கைகோர்த்தன. இது ஈரானுக்குப் பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

**இஸ்ரேல் உடனான உறவு**

சமீப காலமாக அரபு நாடுகளின் அரசுகள் இஸ்ரேலுடன் நெருங்கி வருகிறது. ஆகவே, அது ஈரானுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்குமா என்பது ஐயமே. ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலில் அதன் உச்ச தலைவர் மட்டுமல்ல, ராணுவத் தளபதியும், அதன் இஸ்லாமிய புரட்சிப் படைப் பிரிவின் தளபதியும் கொல்லப்பட்டனர்.

கொமேனி மீதான தாக்குதல் துல்லியமாக நடந்திருக்கிறது. பல்லாண்டு காலப் பொருளாதரத் தடைகளால் சூழப்பட்டிருக்கும் ஈரானுக்கு இப்போது ரஷ்யா, சீனா உட்பட யாரிடமிருந்தும் உதவி எந்தளவில் கிடைக்கும் என்பது தெரியவில்லை. இப்படி தொடரும் அரபு நாடுகளுடனான முரண்பாடு ஈரானின் பொருளாதாரத்தை மேலும் கடுமையாக பாதிக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன்முதலாக இலங்கையில் அதிகாரப்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இனப்பிரச்சினையைக் கையாளுவதற்கு ராஜீவ் காந்தி பயன்படுத்தினார்.

1987 ஜூலை 29 சமாதான உடன்படிக்கையில் கொழும்புக்கு வருகைதந்த ராஜீவ் காந்தியுடன் செல்வாக் குமிக்க அமைச்சர்கள், இராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய பெரிய தூதுக்குழுவொன்று வந்திருந்தது. இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக்கட்டங்களில் தீர்க்கமான பாத்திரத்தை வகித்து சமாதான உடன்படிக்கைக்கு அடித்தளத்தை அமைத்துக் கொடுத்த பார்த்தசாரதி அந்த தூதுக்குழுவில் இல்லாதது ஒரு பிரகாசமான வெற்றிடமாக இருந்ததாக அந்த நேரத்தில் அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களில் வர்ணிக்கப்பட்டது. எது எவ்வாறிருந்தாலும், இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்துக்கான கோட்பாட்டு அடிப்படையையும் பல்லின சமுதாயமொன்றுக்கான அரசியலமைப்பு அத்திபாரத்தையும் அமைத்த பெருமையில் பெரும்பகுதி பார்த் தசாரதிக்கே உரியது என்று என்பதில் சந்தேகமில்லை என்று நீலன் திருச்செல்வம் எழுதினார்.

மாகாணசபைகளை அமைப்பதற்காக இலங்கை அரசியலமைப்புக்கு 13 வது திருத்தம் கொண்டுவரப்பட்டு 38 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், அது இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத் தப்படவுமில்லை, மாகாணசபைகள் ஒழுங்காக இயங்கவுமில்லை. கடந்த எட்டு வருடங்களாக மாகாணசபை தேர்தல்கள் நடத்தப் படவில்லை.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் ஒரு வருட காலத்திற்குள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக உறுதியளித்த போதிலும், சாத்தியமானளவுக்கு அந்த தேர்தல்களை மேலும் பின்போடுவதற்கான வியூகங்களே முன்னெடுக்கப்படுகின்றன போன்று தெரிகிறது.

தமிழ் அரசியல் கட்சிகள் இனப்பிரச்சினைக்கு சமஷ் டிமுறையின் அடிப்படையிலான தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துகின்றன. வேறு காரணத்துக்காக என்றாலும் சிங்களவர்கள் தரப் பில் சமஷ்டி ஆட்சி முறை யோசனை முன்வைக்கப்பட்டு ஒரு நூற்றாண்டும் தமிழர் தரப்பினால் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு முக்கால் நூற்றாண்டும் கடந்துவிட்ட நிலையில், அரைகுறையான அதிகாரங்களுடன் கூடிய மாகாண சபைகளைக் கூட ஒழுங்காக செயல்பட வைப் பதில் அக்கறையில்லாமல் சிங்கள அரசியல் சமுதாயம் இருக்கிறது.

தமிழர் அரசியல் சமுதாயம் சமஷ்டி முறைத் தீர்வொன் றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், புதிய அரசிய லமைப்பை அரசாங்கம் கொண்டுவரும் பட்சத்தில் முதலில் மாகாணசபைகளைக் காப்பாற்றப் போராடவேண்டியிருக்கும்.

## மாகாணசபைத் தேர்தல்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்ற முன்மொழிவைச் செய்தபோது அதனை அக்குழுவின் தலைவரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான விஜித ஹேரத் நிராகரித்து சட்டமா அதிபர் மற்றும் தேர்தல் ஆணையாளருடனான கலந்துரையாடலுக்காகக் குழுவின் கூட்டத்தை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார்.

இந்தப்பின்புலத்தில் வைத்தே ஏலவே வெளிநாட்டமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாண்டு தேர்தல் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளதையும் குழுவின் தலைவரான வெளிவிவகார அமைச்சர் ஹேரத்தின் அணுகுமுறையையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அறிக்கையில் கூறப்பட்டவாறு இவ்வாண்டு தேர்தல் நடத்துவதாயின் குழுக்கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கவேண்டும். அதை நிராகரித்து மேலும் அதற்கான நடைமுறைகளை குழுவின் தலைவர் விரிவுபடுத்துவதற்கான அணுகுமுறை தேர்தலை நடத்துவதை தவிர்ப்பதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தை மேலும் உறுதிப்படுத்துவதாகவே தோன்றுகிறது. இந்த அணுகுமுறையைப்நோக்கும்போது இறுதியில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் புதிய முறையில் எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டு தேர்தல் நடத்துவது என்றமுடிவுக்கே இக்குழு வருமென எதிர்பார்க்கலாம். அதுமட்டுமன்றி அதன்பின்னர் புலம்பெயர் இலங்கையர் வாக்களிப்பது தொடர்பாக இன்னொரு குழு ஆராயக்கூடும். இந்த ஆராய்வுகள் சிலவேளை அடுத்த ஆண்டிலும் தொடரக்கூடும்.

இதற்கு மேலாக இக்குழுக்கூட்டம் எவ்வாறு நகரும் என்பதை முதற்கூட்டமே வெளிப்படுத்தியது. மாகாணசபைத் தேர்தலைத் தள்ளிவைத்தவர்களும் அதற்கு உடந்தையாக இருந்தவர்களும் நீங்களே என்று ஆளும்தரப்பு உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகளைப்பார்த்துக் குற்றஞ்சுமத்த, மாகாணசபை முறைமையை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வருபவர்கள் நீங்களே என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளுந்தரப்பைக் குற்றஞ்சாட்ட அங்கும் அரசியல் நோக்கமே மேலோங்கியிருந்ததேயன்றி ஒருமித்த தீர்மானம் எடுக்கும் நோக்கம் தென்படவில்லை. உண்மையில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாது இவ்வாறு இழுபடுவதற்கு ஆளுந்தரப்பைவிட எதிர்த்தரப்பே பிரதான காரணம். இதற்கு அக்கட்சிகளின் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களே அடிப்படைக் காரணங்களாக இருந்துள்ளன. ரணில் தனது அரசியல் தேவைகளுக்காக அத்தேர்தலை ஒத்திவைப்பதற்கு புதிய தேர்தல் முறை என்று காய்நகர்த்தியபோது அதேமாதிரி அவ்வாட்சிக்காலத்தில் எதிர்க்கட்சி என்ற பெயரில் ஆளுங்கட்சியாகச் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அந்நேரத்தில் அவ்வாறான ஒரு தேவையிருந்தமையினால் அவர்களும் ரணிலுக்கு ஒத்தூத கனகச்சிதமாக அதற்கான தடை ஏற்படுத்தப்பட்டது. இப்போது ஆட்கள் மாறிவிட்டார்கள். ஆனால் காட்சிகள் மாறவில்லை. இப்போதுள்ளவர்கள் தங்களது அரசியல் நோக்கங்களுக்காக முன்னையவர்களின் அணுகுமுறையைப் பின்பற்றுகிறார்கள், அந்தளவே.

## உலகமயமாதலை எதிர்கொள்ளும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்ச)

இந்த மாற்றங்கள் தமிழ்ச் சமூகத்திலும் காணப்படுகின்றன.

பாரம்பரிய தமிழ்ச் சமூகத்தில் வலுவாக இருந்த குடும்ப அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நகர வாழ்க்கை, வேலைவாய்ப்பின் தன்மை, தனிநபர் சுதந்திரம் ஆகிய காரணங்களால் சிறு குடும்ப முறை அதிகமாகியுள்ளது. இதனால், தலைமுறைகளுக்கு இடையிலான தொடர்பு குறைவதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளது.

எனினும், இந்த மாற்றங்கள் அனைத்தும் எதிர்மறையானவை என்று கூற முடியாது. சிறு குடும்ப அமைப்பு பெண்களின் கல்வி, வேலைவாய்ப்பை அதிகரித்துள்ளது. பாரம்பரிய குடும்ப மதிப்புகளையும் நவீன வாழ்க்கை முறையையும் இணைக்கும் ஒரு புதிய குடும்ப கலாசாரம் உருவாகி வருகிறது.

புலம்பெயர்ந்தோர் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றிருந்த தமிழர் விழாக்களின் வடிவமும் மாறிவருகிறது. பாரம்பரிய முறையில் கொண்டாடப்பட்ட விழாக்கள் இன்று மேடை நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்வுகள் மற்றும் சமூகக் கூடுகளாக மாறியுள்ளன.

மேலும், வெளிநாடுகளில் வாழும் தமிழர் சமூகத்தில் தலைமுறை மாற்றம் மொழி பரம்பரையைப் பாதிக்கும் முக்கிய காரணமாக மாறியுள்ளது. புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் கல்வி மற்றும் சமூக வாழ்க்கை பெரும்பாலும் அந்நாட்டு மொழியிலேயே நடைபெறுகிறது. குழந்தைகள் பள்ளி மற்றும் சமூக சூழலில் அந்த மொழியையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இதனால், தமிழ் மொழியைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் குறைந்து விடுகின்றன.

பல குடும்பங்களில் பெற்றோர் தமிழில் பேசினாலும், குழந்தைகள் பெரும்பாலும் அந்நாட்டு மொழியிலேயே பதிலளிக்கும் நிலை காணப்படுகிறது. இந்த நிலை நீண்ட காலத்தில் மொழிப் பரம்பரையைப் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. இது தமிழ்ச் சமூகத்துக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் பல மொழி சமூகங்களும் எதிர்கொள்ளும் பொதுவான சவாலாகும்.

இதை எதிர்கொள்ள புலம்பெயர் தமிழர் சமூகங்கள் பல நாடுகளில் தமிழ்ப் பள்ளிகளை நிறுவியுள்ளன. வார இறுதி நாள்களில் நடைபெறும் இந்தப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் வரலாறு போன்றவை கற்பிக்கப்படுகின்றன. இருப்பினும், குழந்தைகளின் நேரக் குறைவு, கல்விச் சுமை, தொழில்நுட்பத்தின் கவர்ச்சி போன்ற காரணங்களால் தமிழ்ப் பள்ளிகளில் தொடர்ச்சியான பங்கேற்பு குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இணையவழி பாடங்கள், கைப்பேசி பயன்பாடுகள், எண்ம நூலகங்கள், இணைய வகுப்புகள் போன்றவை தமிழ் மொழி கற்றலை எளிதாக்குகின்றன.

முதல் தலைமுறை புலம்பெயர் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர் அந்நாட்டு சமூகத்தோடு அதிகமாக இணைந்திருக்கிறார்கள்.

மருத்துவம், பொறியியல், தகவல் தொழில் நுட்பம், வணிகம், ஆராய்ச்சி போன்ற பல துறைகளில் தமிழர்கள் உலக அளவில் சிறந்து விளங்குகின்றனர்.

இது தமிழ்ச் சமூகத்தின் திறமையையும் கல்வி மீது கொண்ட முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது.

பல நாடுகளில் தமிழர் சங்கங்கள் ஆண்டுதோறும் பொங்கல் விழா, தமிழ் புத்தாண்டு, தீபாவளி போன்ற திருவிழாக்களை பொதுமக்கள் கலந்து கொள்ளும் வகையில் நடத்துகின்றன. இவ்விழாக்கள் சமூக ஒற்றுமையை வளர்க்கும் நிகழ்வுகளாக மட்டுமல்லாமல், தமிழர் பண்பாட்டை அந்நாட்டு மக்களுக்கும் அறிமுகப்படுத்தும் வாய்ப்பாகவும் அமைகின்றன.

கோயில்கள் சமூக ஒற்றுமையை உருவாக்கும் இடங்களாகவும் செயல்படுகின்றன. பல தலைமுறைகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றுகூடி பண்பாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குகின்றன.

புலம்பெயர் தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கியப் பங்களிப்பை வழங்குகின்றனர். பல தொழில் முறை துறைகளில் தமிழர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

தங்கள் பாரம்பரிய அடையாளத்தை பாதுகாக்க முயற்சி செய்யும் நேரத்தில், அவர்கள் வாழும் நாட்டின் சமூகத்தோடு இணைந்து புதிய கலாசார அனுபவங்களை தமிழர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இதன் விளைவாக "உலகத் தமிழர்" என்ற புதிய அடையாளம் உருவாகியுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் மட்டுப்படுத்தப்பட்ட அடையாளம் அல்ல. உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களின் ஒருங்கிணைந்த அடையாளமாகும்.

புலம்பெயர் சூழலில் வளர்கின்ற புதிய தலைமுறையினர், பல்வேறு மொழிகளையும் பண்பாடுகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கின்றனர். இது அவர்களின் உலகப் பார்வையை விரிவாக்கினாலும், சில நேரங்களில் தாய் மொழி மற்றும் பாரம்பரிய பண்பாட்டுடன் உள்ள தொடர்பைக் குறைக்கும் அபாயமும் உள்ளது. இதைத் தவிர்க்க குடும்பம், கல்வி அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் இணைக்கும் ஒரு சமூகமாக தமிழர்கள் வளர வேண்டும்.

பாரம்பரியத்தின் வேர்களை உறுதியாகப் பிடித்தபடியே நவீன உலகின் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்வதே தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் பாதையாகும். உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால், தமிழும் தமிழர் பண்பாடும் உலகளாவிய அளவில் மேலும் வலுவடையும். (தினமணி)

## இந்தியாவின் அயலக...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்களுக்கு முகங்கொடுக்காமல் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்கு அதன் கடல்சார் பிராந்தியக் கூட் டணியை (இந்து சமுத்திரக் கரையோர நாடுகள் சங்கம், கொழும்பு பாதுகாப்பு குழுமம், இந்து சமுத்திரப் பிராந் திய தகவல் கூட்டிணைவு நிலையம் உட்பட) பலப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கவேண்டும்.

தெற்காசியாவுக்கு கூடுதலான அளவுக்கு பிராந்திய வர்த்தகம், போக்குவரத்து தொடர்புகள், சக்திவள பகிர்வுக்கான தளங்கள் தேவைப்படுகின்றன. உப கண்டத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் பங்கும் ஈடுபாடும் இருக்கக்கூடியதாக பிராந்தியப் பாதுகாப்பு தொடர்பில் பெருமளவுக்கு சம்பாசணைகளும் தெற்காசியாவுக்கு அவசியமாகும். தற்போது குவாட்டின் தலைமைத்துவ நாடாக இந் தியா இருப்பதால் இந்த வருடம் அந்த அமைப்பின் உச்சிமாகநாட்டை நடத்த வேண்டியிருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கலந்துகொள்வார்.

மேற்காசியப் போரைக் கருத்திற்கொண்டு பிராந்தியத்தின் கடற்பரப்பில் பெருமளவுக்கு உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான சிறந்த தொடர்பாடல்களை உறுதிசெய்யும் நோக்கில் குவாட் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டியதே இந்தியா உடனடியாக முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயம்.

### சமநிலையை திரும்பவும் ஏற்படுத்துதல்

உலகின் வடக்கு - தெற்கு பிறவின் மறுபக்கத்தில், இந்தியா இந்த வருடம் பிறிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, சீனா, இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய அமைப்பு) உச்சிமகாநாட்டை நடத்த விருக்கிறது. அந்த மகாநாட்டுக்காக தற்போது பகைமை நாடுகளாக மாறிவிட்ட ஈரான், ஐக்கிய அரபு இராச்சியத்தை ஒரு மேசைக்கு கொண்டுவர வேண்டும். அதற்கு தற்போதைய பதற்ற நிலைக்கு மத்தியில் புதுடில்லி தனது இராஜதந்திர ஆற்றலை வெளிக்காட்ட வேண்டியிருக்கும்.

பிறிக்ஸ உச்சிமகாநாட்டில் தெற்காசியாவின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு அக்கறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அறிக்கையை வெளியிடுவதற்கு கருத்தொருமிப்பைக் காண இந்தியா கடுமையாகப் பாடுபட வேண்டியிருக்கும். அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடை யில் தற்போது சமநிலையான செயற்பாட்டை கைவிட் டிருக்கும் இந்தியா மேற்காசியக் கொள்கையில் சமநி லையான கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்க வேண் டிய நேரம் இது.

கயிற்றில் நடப்பதைப் போன்ற இந்த செயற்பாட்டில் இந்தியாவின் பாரம்பரியமான நிலை பதற்றமானதாக இருக்கலாம். ஆனால், இந்திய மக்களினதும் அயல்நாடுகளினதும் மக்களினதும் எதிர காலத்தை வழிநடத்தக்கூடிய வாய்ப்பான ஒரு அந்தஸ்தை அது புதுடில்லிக்கு கொடுக்கும். (தி இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்போன...

ஆகியோருக்கி டையில் நீண்ட காலமாகப் பிணக்கு நிலை இருந்துள் ளது. கொல்லப்பட்டவரின் மகன் வட மத்திய மாகாணத்திலுள்ள பலகலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

சம்பவம் இடம்பெற்ற நாளுக்கு அடுத்த நாள், தனது தாயாரையும், சகோதரியையும் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் வீட்டுக்கு வந்த அவரது மகன், வீட்டில் அசம்பாவிதம் நடைபெற்றிருந்ததை அவதானித்த தள சமயம், வீட்டில் நின்ற தாயாரின் கார் காணமல்போனதை அவதானித்துள்ளார்.

அன்றைய தினமே - கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் தனது தாயாரையும், சகோதரியையும் சகோதரியின் கணவர் கடத்திவிட்டார் என்று முறைப்பாடு செய்துள்ளார்.

அதேசமயம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் சம்பவம் தொடர்பில் போலிஸார் விரைந்து செயற்பட வேண்டும் என வட பிராந்தியப் பிரதிப் பொலீஸ்மா அதிபரை கடிதம் மூலமும், நேரில் சந்தித்தும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இதனையடுத்து யாழ்பாணம் போலிஸார் தீவிர விசாரணைகளில் இறங்கியுள்ளனர்.

விசாரணைகளின்போது, யாழ்ப்பாணத்திலிருந்து காரில் புறப்பட்ட மகளும், மருமகனும் பரந்தன் சந்தியில் உள்ள வங்கி ஒன்றின் தன்னியக்க இயந்திரத்தில் விரிவுரையாளரின் வங்கி அட்டையைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதும், திருகோணமலையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் கொல்லப்பட்ட விரிவுரையாளரின் தொலைபேசி இலக்கத்தில் பதிவு செய்யப்பட்ட கியூ.ஆர் குறியீட்டைப் பயன்படுத்தி காருக்குப் பெற்றோல் நிரப்பியிருக்கின்றனர் என்பதும் தெரியவந்தது. இவ்விரு சம்பவங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இடங்களில் பெறப்பட்ட கண்காணிப்பு கமெரா பதிவுகளின் அடிப்படையிலும், சந்தேக நபர்களின் தொலை பேசி செல்லிட வரிப்படத்தின் படியும் பின் தொடரந்து சென்ற போலிஸார், திருகோணமலை - நிலாவெளிப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் மாலை இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படும் வழியில் தாயார் கொலை செய்யப்பட்டு விட்டார் என்பது பொலீஸ் விசாரணை களில் தெரியவந்துள்ளது. கொலை செய்யப்பட்ட தாயாரின் உடலத்தை சாவகச்சேரி - பரந்தன் பகுதிக்கிடையில் காட்டுப் பகுதி ஒன்றில் வீசி விட்டு வந்ததாகப் பொலிஸாரிடம் தெரிவித்த சந்தேக நபர்கள், உடலம் வீசப்பட்ட பகுதியைச் சரியாக அடை யாளம் காட்டுவதற்குச் சிரமப்பட்டிருக்கின்றனர்.

தனங்கிளப்புக்கு அண்மையாக, காற்றாலை ஒன்றுக்கு அண்மையில் என்ற குறிப்பின் அடிப்படையில் நேற்று அதிகாலை முதல் தேடுதல் மேற்கொண்ட போலீஸார், நண்பகலுக்கு முன்னர் அறுகுவெளிப் பகுதியில் இருந்து உருக்குலைந்த நிலையத்தில் உடலத்தை மீட்டனர். சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் உட லம் மீட்கப்பட்ட பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்ட பின், உடற்கூற்றியல் பரிசோதனைகளுக்காக உடலம் யாழ்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

உடற்கூற்றியல் பரிசோதனை, மரண விசாரணைகளின் பின்னர் உடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் நேற்று யாழ்ப் பாணம் நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டதையடுத்து, தடுப்பு காவலில் வைத்து விசாரிப்பதற்கான அனுமதியைப் பெற்றுள்ளதாகப் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ஓ-5)

## சுகாதார...

எச்சரித்துள்ளனர்.

சுகாதார சேவையைப் பராமரிக்க ஊழியர்கள் எவ்வி தத் தடையுமின்றி கடமைக்குச் சமூகம் அளிப்பது அவசி யமாகும். இருப்பினும், தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாகப் பணியாளர்கள் கடமைக்குத் திரும்புவதில் பாரிய சவால்களை எதிர் கொண்டுள் ளதாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏனைய அரச துறை ஊழியர்களைப் போலன்றி, வைத்தியர்களுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளோ அல்லது எரிபொருள் கொடுப்பனவுகளோ வழங்கப்படுவதில்லை. இதனால், அவசர அழைப்புகள் மற்றும் மேலதிக நேரக் கடமைகளுக்காகத் தங்க ளது சொந்தச் செலவிலேயே அவர்கள் பயணிக்க வேண்டியுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள கியூ.ஆர். குறியீடு அடிப்படையிலான எரிபொருள் பங்கீடு, கடமைக்குச் செல்வதற்கு போதுமானதாக இல்லை எனவும், எரிபொருள் வரிசைகளில் காத்திருப்பதால் நோயாளர் பராமரிப்புக்கான பெறுமதியான நேரம் வீணடிக்கப்படுவதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். ஒரு வாரத்திற்கு முன்னரே இந்தப் பிரச்னைகள் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும், அத்தியாவசிய சேவை யாகக் கருதப்படும் சுகாதாரத் துறைக்கு இதுவரை முறையான தீர்வுகள் வழங்கப்படவில்லை எனச் சுகாதாரப் பணியாளர்கள் விமர்சித்துள்ளனர்.

எரிபொருள் மற்றும் போக்குவரத்து வசதிகளை உறுதிப்படுத்த அரசாங்கம் அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் நடைமுறைச் சாத்தியமான தீர்வை வழங்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், வரும் திங்கட்கிழமை முதல் மருத்துவமனை சேவைகள் மட்டுப்படுத்தப்படும் அல்லது இடைநிறுத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், சுகாதார சேவைகளின் தொடர்ச்சி குறித்த மேலதிக முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே சில மருத்துவமனைகளில் விசேட வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள் கடமைக்குச் சமூகம் அளிக்க முடியாமை யினால் சேவைகள் பாதிக்கப்படத் தொடங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

## 9 மாகாணங்களிலும்...

தற்போது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகள், கொழும்பை மையமாகக் கொண்டே செயற்படுவது நடைமுறைச் சிக்கல்களைத் தோற்றுவிப்பதாக அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். (அ)

## தேசிய பாதுகாப்பை...

"எஸ்.எல்.என்.எஸ் கஜபாகு" என்ற கடற்படைக் கப்பலில் ஏறியது தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு முன்னர் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து இலங்கை கடற்படை தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்த போதே நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஏ.ஏ.எம்.ஆர். அலி என்பவரால் 2022 செப்ரெம்பரில் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் விண்ணப்பத்தில், முன்னாள் ஜனாதிபதி கப்பலில் பயணித்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா? பயணத்தின் தூரம், செலவு மற்றும் அந்தச் செலவை பொறுப்பேற்றது யார்? போன்ற விவரங்கள் கோரப்பட்டிருந்தன. எனினும், தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி கடற்படை இந்தத் தகவல்களை வழங்க மறுத்திருந்தது.

பின்னர் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு தலையிட்டு, பயணச் செலவு மற்றும் அதற்கான நிதி மூலம் தொடர்பான விபரங்களை மாத்திரம் வழங்குமாறு கடற்படைக்கு அறிவுறுத்தியது.

இதனை எதிர்த்தே கடற்படை மேன்முறையீடு செய்திருந்தது.

நீதியரசர் கலாநிதி சுமுது பிரேமச்சந்திர மற்றும் நீதியரசர் ஆர். குருசிங்க ஆகியோர் அடங்கிய குழுவில் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

அதில், தகவல்களை மறுப்பதற்கு "தேசிய பாதுகாப்பு" என்பது ஒரு போர்வை அல்ல.

கோரப்பட்ட நிதி தொடர்பான தகவல்களால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வாறு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதை கடற்படை உரிய ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தவறிவிட்டது.

வெறுமனே பொதுப்படையான கூற்றுக்களை முன்வைத்து தகவல்களை வழங்காமல் இருக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உத்தரவை உறுதிப்படுத்திய நீதிமன்றம், கடற்படையின் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்தது.

இதன் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல் அறியும் உரிமை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

## பதவிக்காலம்.

பதிவான மிக உயர்ந்த அளவாகும். தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து ஆரம்பத்தில் இந்த வாய்ப்பு 33 வீதமாக இருந்தது.

இதே கேள்வியில் பொலிமார்க்கெட் தளத்தில் 46 வீத வாய்ப்பு காணப்படுகிறது. இந்த சந்தை சமீபத்தில் உருவாக்கப்பட்டதாகவும், அதில் வாய்ப்புகள் சுமார் 50 வீதம் அளவில் மாறாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ட்ரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் இருமுறை பதவி நீக்கம் செய்யப்பட்டவர். 2019ஆம் ஆண்டு உக்ரைன் தொடர்பான விவகாரம் மற்றும் 2021ஆம் ஆண்டு ஜனவரி 6 கபிட்டோல் கலவரச் சம்பவம் தொடர்பாக அவர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இரு முறைவும் செனட் அவையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், இந்த கணிப்பு தளங்களின் மதிப்பீடுகள் எப்போதும் துல்லியமானவை அல்ல என நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அரசியல் சூழ்நிலைகள் மற்றும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகள் போன்றவை இத்தகைய கணிப்புகளை பாதிக்கக்கூடும்.

மேலும், இத்தகைய கணிப்பு சந்தைகள் குறித்து சர்ச்சைகளும் எழுந்துள்ளன. கிறிஸ் மூர்பே உள்ளிட்ட சில அரசியல்வாதிகள், அரசாங்க நடவடிக்கைகள் தொடர்பாக பணம் வைத்து கணிப்பது தவறாக பயன்படுத்தப்படலாம் என எச்சரித்துள்ளனர்.

இதனால், டிரம்ப் மீண்டும் பதவி நீக்கம் செய்யப்படுவாரா என்பது குறித்து உறுதியான முடிவு எதுவும் இப்போது கூற முடியாத நிலை காணப்படுகிறது.

## ஓட்டோ - டிப்பர்...

இடம்பெற்றுள்ளது.

புத்தூரிலிருந்து மீசாலை நோக்கி பயணித்த டிப்பர் வாகனமும், மீசாலையிலிருந்து மட்டுவில் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதன்போது முச்சக்கரவண்டியில் நால்வர் பயணித்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதோடு சாரதியும், பிறிதொரு பெண்ணும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசுக்குள்...

இந்த ஆபத்து குறித்தும் தாம் சுட்டிக்காட்டியதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்ட சில பெருநிறுவனங்கள், தற்போது வெவ்வேறு போர்வைகளில் இந்த ஏகபோகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இவர்கள் பழைய முகங்கள் அல்ல. ஆனால், ஒரு ஏகபோகக் கூட்டணியை நீக்கிவிட்டு, மற்றொரு புதிய கூட்டணியைப் பதிலீடு செய்வதால் மக்களுக்கு எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை" என அவர் தனது "எக்ஸ்" தளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு மத்தியில், இவ்வாறான புதிய "மாபியாக்கள்" உருவாவதைத் தடுக்க வேண்டியதன் அவசியத்தை மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார். (அ)

## கியூ.ஆர்...

வாகன வகைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்ட புதிய எரிபொருள் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வாகன வகைகளுக்கு ஏற்ப வழங்கப்பட்டு வந்த எரிபொருள் அளவில் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, சிற்றூந்துகளுக்கான ஒதுக்கீடு 15 லீற்றரிலிருந்து 25 லீற்றராகவும், சிற்றூர்திகளுக்கான ஒதுக்கீடு 40 லீற்றரிலிருந்து 50 லீற்றராகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பேருந்துகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 60 லீற்றரிலிருந்து 100 லீற்றராகவும், முச்சக்கர வண்டிகளுக்கான ஒதுக்கீடு 15 லீற்றரிலிருந்து 20 லீற்றராகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

உந்துருளிகள் மற்றும் குவாட்ரிசைக்கிள் ஆகியவற்றுக்குத் தலா 8 லீற்றர் எரிபொருள் இனி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பாரவூர்தி (200 லீற்றர்) மற்றும் விசேட தேவைக்கான வாகனங்களுக்கு (40 லீற்றர்) வழங்கப்பட்டு வந்த பழைய ஒதுக்கீட்டில் எவ்வித மாற்றங்களும் இன்றி தொடர்ந்தும் அதே அளவு எரிபொருள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தனியார்...

எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, முறையான எரிபொருள் ஒதுக்கீட்டு வழிமுறை இல்லாததால், பேருந்து உரிமையாளர்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சில இலங்கை போக்குவரத்துச் சபைச் சாலைகளில் தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்கப்பட்டாலும், பல இடங்களில் இருப்பு இல்லாததால் பேருந்துகள் நீண்ட வரிசையில் காத்திருந்து வெறும் கையுடன் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது நடைமுறையில் உள்ள கியூ.ஆர். குறியீடு அடிப்படையிலான வாராந்த 60 லீற்றர் எரிபொருள் ஒதுக்கீடு, ஒரு பேருந்தின் இயல்பான இயக்கத்திற்கு போதுமானதாக இல்லை என அவர் தெரிவித்தார்.

மேலும், பகல் நேரங்களில் எரிபொருள் நிரப்புமாறு அறிவுறுத்தப்படுவதால், திட்டமிடப்பட்ட நேர அட்டவணையின்படி பேருந்துகளை இயக்க முடியாமல் போவதுடன் சேவையின் வினைத்திறனும் குறைவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உள்ளிட்ட தரப்பினருடன் இது குறித்து கலந்துரையாடப்பட்ட போதிலும், நடைமுறைக்கு சாத்தியமான தீர்வுகள் இன்னும் எட்டப்படவில்லை.

சுமார் 1,700 நீண்ட தூர பேருந்துகளுக்கு ஒதுக்கீட்டு முறை அறிவிக்கப்பட்டாலும், அதன் அமுலாக்கம் இன்னும் தெளிவற்ற நிலையில் உள்ளது. தற்போதைய எரிபொருள் கையிருப்பு தீர்ந்து வருவதால், இந்த நிலை தொடர்ந்தால் வரும் நாட்களில் பேருந்து சேவைகள் 50 வீதம் வரை குறைக்கப்படலாம் என அவர் எச்சரித்துள்ளார்.

எனவே, போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் போக்குவரத்து அதிகாரிகள் இணைந்து, நம்பகமான எரிபொருள் ஒதுக்கீட்டு முறையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## எரிபொருள்...

செய்யப்பட வுள்ளது.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 60 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 255 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு - கிழக்கில் 3 ஆண்டுகளில் 2500 வீடுகள் நிர்மாணிக்கப்படும்

கொழும்பு, மார்ச். 22

வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்ற திட்டத்தின் கீழ் 2,500 வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது, இந்த வீடுகளை எதிர்வரும் 3 வருடங்களுக்குள் நிர்மாணித்து வீட்டுப்பிரச்னைக்கு தீர்வுகாண்போம் என்று வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் ரீ. பீ. சரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த வருடத்தில் வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்ற திட்டத்தின் கீழ் 2,500 வீடுகளுக்காக எங்களால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீடொன்றுக்காக இது வரை காலம் 9 இலட்சம் முதல் 15 இலட்சம் ரூபாயே வழங்கப்பட்டது.

ஆனால், ஜனாதிபதி இந்த பிரதேச மக்கள் தொடர்பில் விசேட அவதானத்தை செலுத்தி வீடொன்றுக்காக 20 இலட்சம் ரூபாயை வழங்குமாறு கூறியுள்ளார். இதன்படி அந்தத் தொகை வழங்கப்படும்.

அத்துடன் 2,500 மீள்குடியேற்ற வீடுகளை நிர்மாணிக்கவும் எதிர்வரும் 3 வருடங்களில் அந்த வேலைத்திட்டங்களை நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி வடக்கு, கிழக்கில் இந்தப் பிரச்னைக்கு மூன்று வருடங்களில் தீர்வு காணப்படும். - என்றார். (எ)

## மூங்கிலாறு பிரதேச மருத்துவமனை

# காவலாளியை தாக்க முற்பட்டதாக சந்தேகிக்கப்படும் இருவர் கைது!

புதுக்குடியிருப்பு, மார்ச். 22

உடையார்கட்டு - மூங்கிலாறு பிரதேச மருத்துவமனை காவலாளியை தாக்க முற்பட்டதாக சந்தேகிக்கப்படும் இருவர் நேற்று முன்தினம் மாலை புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

உடையார்கட்டு - மூங்கிலாறு பிரதேச மருத்துவமனைக்கு சென்ற நபர் ஒருவருக்கும் காவலாளிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதனை தொடர்ந்து காவலாளியை குறித்த நபர் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து மருத்துவமனை பிரதான வாயில் மூடப்பட்டு வெள்ளிக்கிழமை மூங்கிலாறு பிரதேச மருத்துவமனையின் சேவைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை என்பதால் குறித்த கிராம நோயாளர்கள், மாதாந்த கிளினிக் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள், சிகிச்சை பெற வந்த பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் பெரிதும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

இந்த விடயம் குறித்து முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு. உமாசங்கரை தொடர்பு கொண்டு வினவியபோது,

மாகாண பணிப்பாளருடன், உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியதன் அடிப்படையில் மருத்துவமனை செயல்பாடுகள் நிறுத்தப்பட்டு மருத்துவமனையில் குழப்பத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் நபரை கைது செய்தால் மருத்துவமனை செயல்பாடுகள் இடம்பெறும் என்பதுடன் இனிமேல் இவ்வாறான செயல்பாடுகள் இடம் பெறாது பொலிஸார் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த மருத்துவமனை காவலாளியை தாக்கியதாக சந்தேகிக்கப்படும் சுதந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 30, 32 வயதுடைய இரு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (எ)

# வவுனியாவில் பெருநாள் தொழுகை



வவுனியா, மார்ச். 22

வவுனியாவில் நோன்பு பெரு நாள் திடல் தொழுகை நேற்று நடைபெற்றது.

வவுனியா தவ்ஹீத் ஜும்ஆ பள்ளிவாசல் ஏற்பாட்டில் பட்டாணிச்சூரின் வேப்பங்குள வீதியில் உள்ள திடலில் குறித்த தொழுகை நடைபெற்றது. (எ-10)

# வட்டுக்கோட்டை மருத்துவமனை முன் மக்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்




யாழ்ப்பாணம், மார்ச். 22

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக பொதுமக்கள் நேற்று அமைதி வழியிலான கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த மருத்துவமனையில் ஏராளமான கட்டடங்கள் காணப்படுவதாகவும், ஆனால் மருத்துவர்கள் இருவரே கடமை செய்வதாகவும், ஒரு தாதிய உத்தியோகத்தர் கூட மருத்துவமனைக்கு நியமிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கடந்த காலங்களில் குறித்த மருத்துவமனையில் 24 மணி நேர சேவை நடைபெற்றதாகவும், நோயாளர் விடுதி இயங்கியதாகவும், தற்போது அது நிறுத்தப்பட்டதாகவும், குறித்த மருத்துவமனையின் அம்புலன்ஸ் காரைநகர் மருத்துவமனைக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டதாவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, குறித்த பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வினை வழங்குமாறு கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "மருத்துவமனையை தரமுயர்த்துங்கள், விடுதி இயங்கும் மருத்துவமனையாக இந்த வட்டுக்கோட்டை மருத்துவமனை தொழில்பட வேண்டும், மக்களின் ஆரோக்கியம் எங்கள் உரிமை, சுகாதார சேவைகள் அரசின் கடமை, நோயாளிகளின் உயிர் முக்கியம், வட்டுக்கோட்டை மருத்துவமனையை புறக்கணிக்கக் கூடாது, மருத்துவசேவையில் குறைபாடு வேண்டாம், மருத்துவமனையில் இடைநிறுத்தப்பட்ட கட்டட வேலைகளுக்கு நிதியை வழங்கு" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் பொதுமக்கள், சமூக மட்ட அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-17)

# மன்னார் மருத்துவமனைக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

மன்னார், மார்ச். 22

மன்னார் நகர சபையினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நகர சபையின் நிதியில் இருந்து முன்னெடுக்கப்படவுள்ளது. நகர சபையின் நிரந்தர சேமிப்புக் கணக்கில் இருந்து 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் மருத்துவமனையில் ஒரு நவீன ரக வெளிநோயாளர் பிரிவு அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் நகர சபை தவிசாளர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மன்னார் நகர சபையின் பத்தாவது கூட்டத்திலே நாங்கள் பல முக்கியமான தீர்மானங்களை எடுத்திருக்கிறோம். மன்னார் மருத்துவமனையின் இயக்குநர், மருத்துவமனை அபிவிருத்தி குழு மற்றும் மன்னார் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, மன்னார் மருத்துவமனைக்கு மன்னார் நகர சபையின் நிரந்தர சேமிப்புக் கணக்கில் இருந்து 10 கோடி ரூபாய் வழங்குவதென தீர்மானித்திருக்கிறோம்.

இந்த நிதியின் ஊடாக மன்னார் மருத்துவமனையில் ஒரு நவீன ரக வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடத்தை அமைப்பதே எமது நோக்கமாகும். ஒரு தனியார் மருத்துவமனையில் எவ்வாறு வெளிநோயாளர் பிரிவு இருக்குமோ, அதே போன்ற வசதிகளுடன் கூடிய ஒரு கட்டடத்தை அமைக்கவுள்ளோம். அதில் ஒரு சிறிய அவசர அறுவை சிகிச்சை கூடம், இரத்த வங்கி, வெளி நோயாளர்கள் மருந்துகளைப் பெற்றுச் செல்வதற்கான இரண்டு பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் தீர்மானத்துக்கு சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமது ஆதரவை தெரிவித்தனர். இருப்பினும், தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த இரு உறுப்பினர்கள் இதற்கு எதிராக வாக்களித்தனர்.

வீதி போடுவதற்கும் கால்வாய் அமைப்பதற்கும் பணம் தேவைப்படும் நிலையில், ஏன் மருத்துவமனைக்கு வழங்குகிறீர்கள் என்ற கருத்தை அவர்கள் முன்வைத்தனர்.

இருந்தபோதிலும், மன்னார் மக்களின் உயிரை நாங்கள் மிகவும் அக்கறையுடன் காக்க வேண்டும், அவர்களது சுகாதாரத்தை பேண வேண்டும் மற்றும் மருத்துவத் தேவையை நிறைவேற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துக்காக இந்த 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது." - என்றார். (எ)

# இலங்கை தனது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தவேண்டியது அவசியம்

## இஸ்ரேலிய தூதுவர் வலியுறுத்தல்

புதுடில்லி, மார்ச். 22

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மோதல்கள் தீவிரமடைந்து வரும் நிலையில், இலங்கை தனது சர்வதேச நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டிய அவசியம் இருப்பதாக இந்தியாவுக்கான இஸ்ரேலிய தூதுவர் ரூவன் அசார் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது வெளிநாட்டு கொள்கையில் யாருடன் நெருக்கமாக செயல்படுகிறது என்பதை தெளிவாக நிர்ணயிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். "நாடுகள் தங்களின் நண்பர்கள் யார் என்பதை தெளிவாக தீர்மானிக்க வேண்டிய காலகட்டம் இது" எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையில், பல நாடுகள் தங்களின் அரசியல் மற்றும் இராஜதந்திர நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்து வருகின்றன. இந்த நிலையில், இலங்கையின் நிலைப்பாடு குறித்தும் சர்வதேச மட்டத்தில் கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த நிலையில், இஸ்ரேலிய தூதுவர் ரூவன் அசாரின் கருத்து தொடர்பில் இலங்கை அரசாங்கத்திலிருந்து இதுவரை அதிகார பூர்வ பதில் வெளியாகவில்லை. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.